Find us on facebook/tamilmirror Follow us on tamilmirror epaper/tamilmirror.lk


# தமிழ் Mirror

www.tamilmirror.lk

THURSDAY, MAY 11, 2023

வியாழக்கிழமை மே 11, 2023 | ஒளி: 08 கதிர்: 268 | பக்கம்:06 | நகரப்பதிப்பு★ | FREE

# புறக்கணிக்க, இழுத்தடிக்க கூடவே கூடாது



அரசியல் தீர்வு விவகாரத்தை, "இனப்பிரச்சினைக்கு தீர்வு காணப் பேச்சு" எனக் கூறிக்கூறி, ஜனாதிபதி தேர்தல் இடம்பெறும் வரை இழுத்தடித்து செல்ல, ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க திட்டமிடுவாரானால், அது வெற்றிபெறாது என்று, தமிழ்த் தேசிய கூட்டமைப்பின் மட்டக்களப்பு மாவட்ட எம்.பியான இரா. சாணக்கியன் தெரிவித்தார். அவ்வாறு நடந்தால், தமிழ் மக்களின் வாக்குகளும் கிடைக்காது. எங்களை ஏமாற்றி ஜனாதிபதியாக பதவியேற்றாலும் முறையாக அவரால் பதவி வகிக்க முடியாது என்றார்.

அத்துடன் இந்த மூன்று நாள் பேச்சுக்கு வடக்கு,கிழக்கு தமிழ் அரசியல்வாதிகளுக்கு ஜனாதிபதி விடுத்த அழைப்பை எவரும் புறக்கணிக்கக்கூடாது. அப்படிப் புறக்கணிப்பார்களேயானால் அவர்களின் நிலைப்பாடு தொடர்பில் தமிழ் மக்கள் விளங்கிக்கொள்ள வேண்டும் எனவும் கூறினார்.

பாராளுமன்றத்தில் புதன்கிழமை (10) நடைபெற்ற இலங்கை கடலில் விபத்துக்கு உள்ளான 'எக்ஸ்பிரஸ் பேர்ள்' கப்பலால் ஏற்பட்ட பாதிப்புகள் தொடர்பான சபை ஒத்திவைப்புவேளை விவாதத்தில் உரையாற்றும் போதே, இவ்வாறு தெரிவித்த சாணக்கியன் எம்.பி மேலும் கூறுகையில்;

நாட்டில் புரையோடிப் போயுள்ள இனப்பிரச்சினைக்கு தீர்வு காண்பதற்காகவே வடக்கு மற்றும் கிழக்கு மாகாண மக்கள், தமிழ் அரசியல்வாதிகளுக்கு தொடர்ந்து ஆணை வழங்கி வருகிறார்கள். இனப்பிரச்சினைக்கு தீர்வு காண்பதற்காக விடுக்கப்படும் சகல அழைப்புகளின் போதும் வெளிப்படை தன்மையுடனும், எதிர்பார்ப்புடனுமே பேச்சு வார்த்தைகளில் பங்கேற்கின்றோம்.

தொடர்ச்சி P2

# 1/3 க்கு உணவுப் பிரச்சினை

WFP

இலங்கையின் சனத்தொகையில் மூன்றில் ஒரு பகுதியினர் உணவுப் பாதுகாப்பற்ற நிலையில் உள்ளனர் என்று ஐக்கிய நாடுகளின் உலக உணவுத் திட்டம் வெளியிட்ட அண்மைய அறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

2022 ஆம் ஆண்டு இலங்கையில் 6.3 மில்லியன் மக்கள் உணவு, எரிபொருள் மற்றும் ஏனைய அத்தியாவசியப் பொருட்களின் கடுமையான பற்றாக்குறையால் உணவுப் பாதுகாப்பற்ற நிலையில் இருந்தனர் என்று குறிப்பிடப்பட்டுள்ளது.

தொடர்ச்சி P2

# இன்று வருகிறது ஐஎம்எப் குழு




சர்வதேச நாணய நிதியத்தின் பிரதிநிதிகள் குழுவொன்று இன்றையதினம் (11) இலங்கைக்கு வருகை தரவுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

கொழும்பில் உள்ள சர்வதேச நாணய நிதியத்தின் அலுவலகம், இந்த ஆண்டின் பிற்பகுதியில் திட்டமிடப்பட்ட முதல் மறுஆய்வு பணிக்கு முன்னதாக வழக்கமான ஆலோசனைகளின் ஒரு பகுதியாக இந்த விஜயம் அமையவுள்ளது.

குறித்த குழு, மே 11 முதல் 23 ஆம் திகதி வரை இலங்கையில் இருக்கும் என்று தெரிவிக்கப்பட்டு உள்ளதுடன், சர்வதேச நாணய நிதியத்தின் ஆசிய மற்றும் பசிபிக் திணைக்களத்தின் பணிப்பாளர் கிருஷ்ணா சீனிவாசனும் இந்தக் குழுவுடன் வருகை தரவுள்ளார்.

# சர்வதேச சந்தைகளில் யாழ். வாழைப்பழம்

### அதிகாரிகளுக்கு அமைச்சர் டக்ளஸ் பாராட்டு



உள்ளூர் உற்பத்திகளை கிடைக்கின்ற வாய்ப்புகளை சரியான முறையில் பயன்படுத்தி, சர்வதேச சந்தைகளுக்கு எடுத்துச் செல்லுகின்ற போது, எமது மக்களின் பொருளாதாரத்தை உயர்ந்த நிலைக்கு கொண்டு செல்ல முடியும் என்று கடற்றொழில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தெரிவித்தார். யாழ்ப்பாணம், புத்தூரில் அமைக்கப்பட்டுள்ள, வழைப்பழ ஏற்றுமதி தொழிற்சாலையை அண்மையில் பார்வையிட்ட அமைச்சர் ஆழமான தீர்க்கதரிசனமான முயற்சிகளை முன்னெடுக்கும் அரசாங்க அதிகாரிகளுக்கு வாழ்த்துகளையும் தெரிவித்தார்.

தொடர்ச்சி P2



# கிளிநொச்சியில் முள்ளிவாய்க்கால் கஞ்சி

யாழ்ப்பாண பல்கலைக்கழக மாணவர்களால் ஆரம்பித்து வைக்கப்பட்ட முள்ளிவாய்க்கால் கஞ்சி வழங்கும் நிகழ்வு, கிளிநொச்சி கந்தசுவாமி கோவில் முன்பாக ஏ-9 வீதியில் புதன்கிழமை (10) ஆரம்பிக்கப்பட்டது.

(மு. தமிழ்ச்செல்வன்)

# இலங்கையின் கடன் பேச்சில் சீனா பங்கேற்பு


ஜப்பான், இந்தியா, பிரான்ஸ் ஆகிய நாடுகள் உட்பட இலங்கையின் சகல கடன் வழங்குநர்களும் பங்கேற்ற இணைய கலந்துரையாடலில் கண்காணிப்பு மட்டத்தின் அடிப்படையில் சீனா பங்கேற்றுள்ளது. இலங்கையின் அனைத்து கடன் வழங்குநர்களும் தனித்தனியான கலந்துரையாடல்களை நடத்துவதற்கு பதிலாக பொதுவான தளத்தை உருவாக்குவதே செவ்வாய்க்கிழமை (09) நடைபெற்ற இந்தக் கலந்துரையாடலின் நோக்கமாகும் என்று தெரிவிக்கப்பட்டது.

தொடர்ச்சி P2

களுத்துறை சிறுமி மரணம்

# இதுவே முதல் முறை சந்திப்பு

### பிரதான சந்தேகநபர் வாக்குமூலம்




களுத்துறையில் 16 வயது சிறுமியின் நிர்வாண சடலம் கண்டெடுக்கப்பட்ட சம்பவம் குறித்து கைது செய்யப்பட்ட 29 வயதான பிரதான சந்தேகநபர், அந்தச் சிறுமியை தான் முதல் தடவையாக சந்தித்ததாகவும் இதற்கு முன்னர் அவரைத் தெரியாது என்றும் பொலிஸாரிடம் வாக்குமூலம் வழங்கியுள்ளார்.

தொடர்ச்சி P2

# டெங்கை கட்டுப்படுத்த நடவடிக்கை எடுக்கவும்



ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் பணிப்புரையின் பிரகாரம், டெங்கு நோயை கட்டுப்படுத்துவதற்கான அனைத்து முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளையும் மேற்கொள்ளுமாறு, அனைத்து மாகாண செயலாளர்களுக்கும் ஜனாதிபதியின் செயலாளர் சமன் ஏக்கநாயக்க எழுத்து மூலம் அறிவித்துள்ளார்.

டெங்கு கட்டுப்பாட்டு வேலைத்திட்டத்தின் தேவைக்கு ஏற்ப, பிரதம செயலாளர்களுக்கு முழுமையான ஆதரவை வழங்குமாறு பொலிஸாருக்கும் முப்படைக்கும் ஜனாதிபதியின் செயலாளர் பணிப்புரை விடுத்துள்ளார். கடந்த வாரத்தில் நாடளாவிய ரீதியில் 1,896 டெங்கு நோயாளர்கள் பதிவாகியுள்ளதுடன்,

தொடர்ச்சி P2

ஓமான் முதலீட்டாளர் தாக்குதல்

# அச்சுறுத்தவும் இல்லை; கப்பம் பெறவும் இல்லை

### எவ்வித தொடர்பும் இல்லை என்கிறார் இந்திக



வெளிநாட்டு முதலீட்டாளர்களிடம் தான் ஒருபோதும் கப்பம் பெறவில்லை என்றும் எவரையும் அச்சுறுத்தவில்லை என்றும் தெரிவித்த இராஜாங்க அமைச்சர் இந்திக அநுருத்த, தனது பாராளுமன்ற சிறப்புரிமை மீறப்பட்டுள்ளது என்று தெரிவித்தார். தன்னை தொடர்புப்படுத்தி அடிப்படையற்ற வகையில் செய்தி வெளியிட்ட ஊடக நிறுவனங்களை, அதன் ஆசிரியர்களை பாராளுமன்ற ஒழுக்கவியல் மற்றும் சிறப்புரிமை தொடர்பான குழுவுக்கு அழைக்க வேண்டும் என்றும் சபாநாயகரிடம் வலியுறுத்தினார்.

தொடர்ச்சி P2

ரயில் நிலைய அதிபர்களின்

# வேலை நிறுத்தத்தால் சேவைகள் ஸ்தம்பிதம்

ரயில் நிலைய அதிபர்களின் அடையாள வேலை நிறுத்தம் காரணமாக, ஐந்து அலுவலக ரயில் சேவைகள் மற்றும் அனைத்து இரவு தபால் ரயில் சேவைகளும் இரத்துச் செய்யப்பட்டுள்ளதாக ரயில் நிலைய அதிபர்கள் சங்கம் அறிவித்தது.

தொடர்ச்சி P2




தேசபந்துவின் வழக்கில்

# ஆட்சேபனைகளுக்கு கால அவகாசம்

மேல் மாகாணத்துக்கு பொறுப்பான சிரேஷ்ட பிரதி பொலிஸ் மாஅதிபர் தேசபந்து தென்னகோனை சந்தேகநபராக பெயரிட்டு, வாக்குமூலம் பதிவு செய்த கடிதத்தை செல்லுபடியற்றதாக உத்தரவு பிறப்பிக்குமாறு கோரி தாக்கல் செய்யப்பட்ட மனு, குறித்த எதிர்மனுதாரர்களின் ஆட்சேபனைகளைத் தெரிவிப்பதற்கு மேன்முறையீட்டு நீதிமன்றம், புதன்கிழமை (10) காலஅவகாசம் வழங்கியது.

தொடர்ச்சி P2



PAGE 1 தொடர்ச்சிகள்

# புறக்கணிக்க, இழுத்தடிக்க கூடவே கூடாது

தற்போதும் வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களில் நிலவும் அடிப்படை பிரச்சினைகளுக்கு தீர்வு காண ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களின் தமிழ் அரசியல்வாதிகளை தனித்தனியாக சந்திக்க தீர்மானித்துள்ளதாக குறிப்பிட்டு எமக்கு அழைப்பு விடுக்கப்பட்டது. இவ்விடயம் தொடர்பில் வடக்கு மற்றும் கிழக்கு மாகாண அரசியல்வாதிகள் மத்தியில் மாறுபட்ட பல நிலைப்பாடுகள் காணப்பட்டன.

வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களை வேறுபடுத்தி இனப்பிரச்சினைக்கு தீர்வு காண முடியாது என்பதை ஜனாதிபதியிடம் எடுத்துரைத்தோம். இதனை தொடர்ந்து வடக்கு மற்றும் கிழக்கு மாகாண தமிழ் அரசியல்வாதிகளை ஒன்றாக சந்திக்க ஜனாதிபதி இணக்கம் தெரிவித்தார். இதற்கமைய நாளை (இன்று) காணி விவகாரம் தொடர்பான பேச்சுவார்த்தை இடம்பெறவுள்ளன. 12 மற்றும் 13 ஆகிய திகதிகளில் அதிகாரப் பகிர்வு தொடர்பில் பேச்சுவார்த்தை இடம்பெறவுள்ளது.

இனப்பிரச்சினைக்கு, அடிப்படை பிரச்சினைகளுக்கு தீர்வு காணும் வகையிலான பேச்சுவார்த்தைக்கு வாய்ப்பு கிடைக்கும் போது அதனை தமிழ் தரப்பினர் சாதகமாக பயன்படுத்திக் கொள்ள வேண்டும். இனப்பிரச்சினைக்கு தீர்வு காண்பதற்காகவே வடக்கு மற்றும் கிழக்கு மாகாண மக்கள் தமிழ் தலைமைகளுக்கு தொடர்ந்து ஆணை வழங்குகிறார்கள். ஆகவே ஜனாதிபதி தலைமையில் இடம்பெறும் பேச்சுவார்த்தையில் வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களின் தமிழ் அரசியல்வாதிகள் கலந்து கொள்ள வேண்டும் என்றார்.

# 1/3 க்கு உணவுப் பிரச்சினை

1948 இல் சுதந்திரம் பெற்ற பின்னர் 2022 ஆம் ஆண்டிலேயே இலங்கை மிக மோசமான பொருளாதார நெருக்கடியை எதிர்கொண்டது என்றும் அந்த அறிக்கையில் சுட்டிக்கட்டப்பட்டுள்ளது.

வெளிநாட்டு கையிருப்பு, அரசியல் கொந்தளிப்பு, உயர் பணவீக்கம் மற்றும் அதிகரித்த பொதுக் கடன் போன்ற பல காரணிகள் நாட்டின் பொருளாதாரத்தில் பேரழிவுகரமான தாக்கத்தை ஏற்படுத்தியது.

2019 ஆம் ஆண்டில் உணவுப் பாதுகாப்பின்மை 10 சதவீதமாக இருந்த ஒரு நாட்டுக்கு இது ஒரு வியத்தகு தலைகீழ் மாற்றத்தைக் குறிக்கிறது என்று அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

# சர்வதேச சந்தைகளில் யாழ். வாழைப்பழம்

உலக வங்கி மற்றும் ஐரோப்பிய ஒன்றியம் ஆகியவற்றின் நிதியுதவியில் விவசாய செயற்பாடுகளை நவீனமயப்படுத்தும் திட்டத்துக்கு அமைய தொழிற்சாலை அமைக்கப்பட்டுள்ளது.

அங்கு பதனிடப்படுகின்ற கதலி வாழைப்பழங்கள் டுபாய் போன்ற நாடுகளுக்கு ஏற்றுமதி செய்வதற்கு முதற்கட்டமாக நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளன.

நிலையில் சுமார் 250 விவசாயிகள் நேரடியாக பயனடைந்துள்ளதுடன் கதலி வாழைப்பழத்திற்கு நியாயமான விலையையும் யாழ்ப்பாண விவசாயிகள் பெறத் தொடங்கியுள்ளனர்.

எதிர்வரும் மாதங்களில் இத்திட்டத்தின் மூலம் ஏற்றுமதியினை விஸ்தரித்து நேரடியாக பயனடையும் விவசாயிகளின் எண்ணிக்கையை 700 ஆக உயர்த்த திட்டமிடப்பட்டுள்ளதாக அதிகாரிகளால் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதனடிப்படையில், எதிர்வரும் மாதங்களில் வாரத்திற்கு 22,000 கிலோ கிராம் கதலி வாழைப்பழம் யாழ்ப்பாணத்தில் இருந்து ஏற்றுமதி செய்ய எதிர்பார்க்கப்படுகின்றமை குறிப்பிடத்தக்கது.

# இதுவே முதல் முறை சந்திப்பு

குறித்த சிறுமிக்கு ஒரு தொலைபேசி அழைப்பு வந்ததாகவும் அந்த அழைப்பின் பின்னர் அவர் அறையிலிருந்த நாற்காலியில் ஏறி ஜன்னல் வழியாக கீழே குதித்ததாகவும் பொலிஸாரிடம் தெரிவித்துள்ளார்.

தன்னுடைய நண்பர் மூலம் அந்த சிறுமி தனக்கு அறிமுகமானதாகவும் தாங்கள் அனைவரும் ஹோட்டலில் மது அருந்தியதாகவும் குறிப்பிட்ட அவர், தனது நண்பரும் அவரது மனைவியும் சென்ற பின்னர் சிறுமியுடன் அறையில் தங்கியதாக குறிப்பிட்டுள்ளார்.

தாங்கள் இருவரும் நிர்வாணமாக அறையில் நடனமாடியதாகவும் உடலுறவு கொள்ளவில்லை என்றும் தெரிவித்த சந்தேகநபர், அவளுடைய அலைபேசிக்கு ஓர் அழைப்பு வந்தது. அந்த அழைப்பின் பின்னர் அவள் சலனமடைந்திருந்தாள் என்றார்.

கீழ்த்தரமான வேலைகளை செய்ய வேண்டாம் என்று அந்த அழைப்பெடுத்த நபருக்கு தெரிவித்த சிறுமி, கதிரையில் ஏறி ஜன்னலின் ஊடாக குதித்ததாக குறிப்பிட்டுள்ளார்.

பின்னர் தனது நண்பனுக்கு அழைப்பு எடுத்ததாகவும் ஹோட்டலை விட்டு வெளியேறியதாகவும் தெரிவித்துள்ளார்.

இந்நிலையில், 48 மணிநேரம் தடுத்து வைத்து விசாரிப்பதற்கு களுத்துறை பிரதான நீதவான் நிதா ஹேமமாலி அனுமதி வழங்கினார்.

களுத்துறை, காலி வீதியின் பிரதான வீதியில் உள்ள ஹோட்டல் ஒன்றின் பின்புறம் உள்ள தண்டவாளத்துக்கு அருகில் இருந்து குறித்த சிறுமியின் சடலம் மீட்கப்பட்டமை குறித்து பிரதான சந்தேக நபர், செவ்வாய்க்கிழமை (09) கைது செய்யப்பட்டிருந்தார்.

அவரை நீதிமன்றத்தில் ஆஜர்படுத்திய பொலிஸார், 24 மணிநேர தடுப்பு காலம் விசாரிப்பதற்கு போதாது என்று கோரியதை அடுத்து, 48 மணி நேர அவகாசம் வழங்கப்பட்டுள்ளது.

# அச்சுறுத்தவும் இல்லை கப்பம் பெறவும் இல்லை

பாராளுமன்றத்தில் புதன்கிழமை (10) விசேட கூற்றை முன்வைத்த போதே இவ்வாறு தெரிவித்த அவர் மேலும் கூறுகையில்,

"கட்டான திவுலபிடிய ஆடைத்தொழிற்சாலையின் ஓமான் நாட்டு முதலீட்டாளர் தாக்கப்பட்ட சம்பவத்துக்கும், எனக்கும் தொடர்பு இருப்பதாக எதிர்க்கட்சி எம்.பி பாராளுமன்றத்தில் உரையாற்றி, அடிப்படையற்ற குற்றச்சாட்டை முன்வைத்துள்ளார். இந்தக் குற்றச்சாட்டால் எனது பாராளுமன்ற சிறப்புரிமை மீறப்பட்டுள்ளது.

ஓமான் நாட்டு முதலீட்டாளர் தாக்கப்பட்ட சம்பவம் தொடர்பில் நான், வெளிவிவகாரத்துறை அமைச்சுக்கு அறிவித்தேன். வெளிநாட்டு முதலீட்டாளர்களை பாதுகாக்க வேண்டும் என்று வெளிவிவகாரத்துறை அமைச்சு அறிவித்ததை தொடர்ந்து அந்தப் பிரதேசத்துக்கு பொறுப்பான அரசியல்வாதி என்ற காரணத்தால் இவ்விடயம் தொடர்பில் கவனம் செலுத்தினேன்.

இந்தச் சம்பவத்துடன் தொடர்புடையதாக சந்தேகிக்கப்படும் ஒருசிலர் கைது செய்யப்பட்டுள்ளார்கள். இந்த விடயத்தில் நான் ஒருபோதும் தலையிடவில்லை. ஆனால் என்னை தொடர்புபடுத்தி பொய்யான குற்றச்சாட்டுகளை முன்வைத்துள்ளதை ஏற்றுக்கொள்ள முடியாது" என்றார்.



# வேலை நிறுத்தத்தால் சேவைகள் ஸ்தம்பிதம்

புதன்கிழமை (10) முதல் தொடர்ச்சியான வேலை நிறுத்த போராட்டம் மேற்கொள்ளப்படும் என்றும் சங்கம் தெரிவித்துள்ளது.

இந்த வேலை நிறுத்தம் காரணமாக, கொழும்பு கோட்டையில் இருந்து புறப்பட இருந்த மற்றும் கோட்டைக்கு வரவிருந்த பல ரயில் சேவைகள் இரத்து செய்யப்பட்டன.

# டெங்கை கட்டுப்படுத்த நடவடிக்கை எடுக்கவும்

மேல் மாகாணத்தில் அதிகளவான டெங்கு நோயாளர்கள் பதிவாகியுள்ளனர். அது 49% ஆகும்.

மேல் மாகாணத்தில் டெங்கு நோயாளர்களில் 21% கம்பஹா மாவட்டத்திலும், 18% கொழும்பு மாவட்டத்திலும், 7% களுத்துறை மாவட்டத்திலும் பதிவாகியுள்ளது. அவற்றில் 3.4% டெங்கு நோயாளர்கள் கொழும்பு மாநகர சபை பிரதேசத்தில் மாத்திரம் பதிவாகியுள்ளனர்.

இது தவிர, திருகோணமலை, மட்டக்களப்பு, கண்டி, காலி மற்றும் கேகாலை மாவட்டங்களில் இருந்தும் அதிகமான நோயாளிகள் பதிவாகியுள்ளனர்.

கடந்த வாரத்துடன் ஒப்பிடுகையில் கொழும்பு, கம்பஹா மற்றும் களுத்துறை மாவட்டங்களில் நோயாளிகளின் எண்ணிக்கை சற்று அதிகரித்துள்ளது.

கடந்த வாரம் மேல் மாகாணத்தில் விசேட டெங்கு கட்டுப்பாட்டு வேலைத்திட்டங்கள் அமல்படுத்தப்பட்டதுடன், டெங்கு நோயாளர்கள் அதிகம் பதிவாகும் கம்பஹா போன்ற மாவட்டங்களில் துரித டெங்கு கட்டுப்பாட்டு வேலைத்திட்டங்களை நடைமுறைப்படுத்துமாறு சம்பந்தப்பட்ட மாகாண சுகாதார சேவை பணிப்பாளர்களுக்கு பணிப்புரை வழங்கப்பட்டுள்ளது.

# இலங்கையின் கடன்...

17 நாடுகள் ஒன்றிணைந்து உத்தியோகபூர்வ கடன் வழங்குநர் குழுவொன்றை உருவாக்கி, இலங்கையின் கடன் கோரிக்கையை ஆலோசிப்பதாக பரிஸ் கிளப் வெளியிட்ட அறிக்கையில் குறிப்பிட்டுள்ளது.

இரு தரப்பு கடன் வழங்குநர்களுக்கு 7.1 பில்லியன் டொலரையும் சீனாவுக்கு 3 பில்லியன் டொலரையும் இந்தியாவுக்கு 1.6 பில்லியன் அமெரிக்க டொலரையும் பரிஸ் கிளப்புக்கு 2.4 பில்லியன் டொலரையும் இலங்கை கடனாக செலுத்த வேண்டியுள்ளது.

12 பில்லியன் டொலருக்கு அதிகமான யூரோ பிணைமுறிகள் மற்றும் 2.7 பில்லியன் டொலர் பெறுமதியான வணிகக் கடன்கள் தொடர்பில் மீண்டும் கலந்துரையாடும் நோக்கத்துடன் இலங்கை அரசாங்கம் முயற்சிகளை மேற்கொண்டுள்ள பின்புலத்திலேயே இந்தக் கலந்துரையாடல் நடத்தப்பட்டுள்ளதாக சர்வதேச ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

13 பில்லியன் டொலருக்கும் அதிகமான உள்நாட்டு கடன் மறுசீரமைப்பிற்கு மேலதிகமாகவே இந்தக் கலந்துரையாடல் நடத்தப்பட்டுள்ளது.

# ஆட்சேபனைகளுக்கு கால அவகாசம்



கொழும்பு, காலி முகத்திடலில் அமைக்கப்பட்டிருந்த 'கோட்டா கோ கம' போராட்ட தளத்தின் மீதான தாக்குதல் சம்பவம் தொடர்பில் இந்தக் கடிதம் அனுப்பப்பட்டிருந்தது.

மேன்முறையீட்டு நீதிமன்ற நீதியரசர்களான நிஷங்க பந்துல கருணாரத்ன மற்றும் எம்.ஏ.ஆர் மரிக்கார் ஆகியோர் அடங்கிய குழாம் முன்னிலையில் மனு பரிசீலிக்கப்பட்ட போது இந்த உத்தரவு பிறப்பிக்கப்பட்டது.

2022ஆம் ஆண்டு மே மாதம் 9ஆம் திகதியன்று போராட்டக்காரர்கள் மீது நடத்தப்பட்ட தாக்குதல் குறித்து, தேசபந்து தென்னகோனை சந்தேகநபராகப் பெயரிடுமாறு சட்டமா அதிபரால் குற்றப் புலனாய்வு திணைக்களத்துக்கு கடிதம் அனுப்பப்பட்டுள்ளது.

அந்தக் கடிதத்தை நடைமுறைப்படுத்துவதை தடுக்கும் வகையில் உத்தரவு பிறப்பிக்குமாறு தேசபந்து தென்னகோனால் மேன்முறையீட்டு நீதிமன்றத்தில் மனுத்தாக்கல் செய்யப்பட்டது.

இந்த மனுவை பரிசீலித்த நீதியரசர்கள் குழாம், தென்னகோனை கைது செய்யவோ அல்லது சந்தேகநபராக பெயரிடவோ இடைக்காலத் தடையுத்தரவு பிறப்பித்ததுடன், குற்றப் புலனாய்வு திணைக்களத்துக்கு அனுப்பிய கடிதத்தை நடைமுறைப்படுத்துவதை தடுக்கும் வகையில் உத்தரவிட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

# டப்புல விவகாரம்: தடையுத்தரவு நீடிப்பு

முன்னாள் சட்டமா அதிபர் டப்புல டி லிவேராவை பயங்கரவாத புலனாய்வுப் பிரிவினர் கைது செய்வதையோ அல்லது வாக்குமூலம் பதிவு செய்வதையோ தடுக்கும் வகையில் பிறப்பிக்கப்பட்ட இடைக்கால தடை உத்தரவை மேன்முறையீட்டு நீதிமன்றம், ஜூன் மாதம் 22 ஆம் திகதி வரை நீட்டித்தது.

மேன்முறையீட்டு நீதிமன்ற நீதியரசர்களான நிசங்க பந்துல கருணாரத்ன மற்றும் ஏ.மரிக்கார் ஆகியோர் அடங்கிய குழாம் முன்னிலையில் மனு, புதன்கிழமை (10) பரிசீலிக்கப்பட்ட போதே இந்த உத்தரவு பிறப்பிக்கப்பட்டது.

மனுவில் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்கள் தொடர்பில் பிரதிவாதிகளுடன் கலந்தாலோசிப்பது அவசியம் என்றும் அதற்கு சுமார் ஒரு மாத கால அவகாசம் தேவை எனவும் மேலதிக சொலிசிட்டர் ஜெனரல் பரிந்த ரணசிங்க, மன்றுக்கு தெரிவித்தார்.

மனுதாரர் கோரிக்கைக்கு ஆட்சேபனை தெரிவிக்காததால், மேலதிக சொலிசிட்டர் ஜெனரலின் கோரிக்கையை ஏற்ற நீதியரசர்கள் குழாம், மனுவை ஜூன் 22ஆம் திகதி பரிசீலிப்பதற்கு தீர்மானித்ததுடன், இடைக்கால தடையுத்தரவையும் நீட்டித்தது.

ஈஸ்டர் ஞாயிறு தாக்குதல் குறித்து வெளிட்ட கருத்து தொடர்பில் வாக்குமூலம் வழங்க ஏப்ரல் 19 மற்றும் 21 ஆம் திகதிகளில் லிவேராவை ஆஜராகுமாறு அறிவிக்கப்பட்ட போதிலும் அவர் ஆஜராகத் தவறியதையடுத்து, ஏப்ரல் 24ஆம் திகதி ரிஜடிக்கு வருகை தரத் தவறினால் அவருக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் அறிவிக்கப்பட்டிருந்தது.

இந்நிலையிலேயே, பயங்கரவாத புலனாய்வுப் பிரிவில் வாக்குமூலம் வழங்குவதற்காக தனக்கு விடுக்கப்பட்ட அழைப்பாணையை சவாலுக்கு உட்படுத்தி மேன்முறையீட்டு நீதிமன்றத்தில் தனது சட்டத்தரணிகள் ஊடாக லிவேரா, மனுவொன்றை தாக்கல் செய்திருந்தார்.

தாம் சட்டமா அதிபராக கடமையாற்றிய போது மேற்கொள்ளப்பட்ட செயலை பொலிஸாரால் விசாரிக்க முடியாது எனவும், சட்டமா அதிபரின் சிறப்புரிமை மீறப்படும் எனவும் முன்னாள் சட்டமா அதிபர் தனது மனுவில் சுட்டிக்காட்டியிருந்ததுடன், தன்னை கைது செய்து விசாரணை நடத்துவதைத் தடுக்க உத்தரவிடுமாறு மனுவில் கோரியிருந்தார்.

கடந்த 24ஆம் திகதியன்று மனுவை பரிசீலித்த மேன்முறையீட்டு நீதிமன்ற நீதியரசர்களான நிஸ்ஸங்க பந்துல கருணாரத்ன மற்றும் ஏ.மரிக்கார் ஆகியோர் அடங்கிய குழாம் இடைக்காலத் தடை உத்தரவைப் பிறப்பித்திருந்தது.

ஈஸ்டர் ஞாயிறு தாக்குதலின் பின்னணியில் பாரிய சதித்திட்டமொன்று காணப்படுவதாக முன்னாள் சட்ட மா அதிபர் தப்புல டி லிவேரா 2021 ஆம் ஆண்டு மே மாதம் 17 ஆம் திகதி தெரிவித்திருந்தார்.



உயிர்த்த ஞாயிறு தாக்குதல் இடம்பெற்ற விதம், நேரம், தினம் மற்றும் ஏனைய விடயங்கள் அரச புலனாய்வுச் சேவைக்கு கிடைத்தமையின் ஊடாக பாரிய சதித்திட்டமொன்று இந்தத் தாக்குதலின் பின்னணியில் இருக்கின்றமை வெளிப்படுவதாகவும் இந்தப் பாரிய சதித்திட்டத்துடன் தொடர்புடைய அனைவரும் சாட்சியங்களின் ஊடாக வெளிப்படுத்தப்பட வேண்டும் என்றும் அவர் சுட்டிக்காட்டியிருந்தார்.

நல்லிணக்கத்தைக் கட்டியெழுப்புவதற்கான

# முன்மொழிவுகள் சமர்ப்பிப்பு

■ ஏ.எச்.ஏ ஹுஸைன்

சமூகங்களுக்கு இடையிலான சமாதானத்தையும் சகவாழ்வையும் நல்லிணக்கத்தையும் தொடர்ந்து பேணி வருவதற்காக, தேசிய சமாதானப் பேரவை அமல்படுத்தும் மாவட்ட சர்வமதப் பேரவையின் செயற்பாடுகளை எதிர்வரும் ஆண்டும் செயற்படுத்துவதற்கான திட்ட முன் மொழிவுகளைச் சமர்ப்பிக்கும் செயலமர்வு மட்டக்களப்பில் புதன்கிழமை (10) நடைபெற்றது.

தேசிய சமாதானப் பேரவையின் மட்டக்களப்பு மாவட்ட சர்வமதப் பேரவைக்கான இணைப்பாளர் ஆர். மனோகரன் தலைமையில், மட்டக்களப்பு கூட்டுறவுக் கட்டடத் தொகுதியின் கேட்போர் கூடத்தில் நடைபெற்ற இந்தச் செயலமர்வில், இந்து, இஸ்லாமிய, கிறிஸ்தவ, பௌத்த சமூகங்களைச் சேர்ந்த மாவட்ட சர்வமதப் பேரவை உறுப்பினர்களும் அதன் சமாதான செயற்பாட்டாளர்களும் கலந்து கொண்டனர்.



இச்செயலமர்வில், இன ஐக்கியத்தை கட்டிக்காக்கும் விடயங்கள் பற்றிய கரிசனைகள் முன்வைக்கப்பட்டன.

சமூக நல்லுறவு, சகவாழ்வு, நல்லிணக்கம், சமாதானம் ஆகியவற்றோடு வாழும் எதிர்கால இளம் சமூகத்தை உருவாக்குவதோடு, சமாதானத்தைச் சீர்குலைக்கும் எந்த நடவடிக்கையையும் முன் கூட்டியே அறிந்து, அவை வன்முறை நிலைமாற்றமடையாத வகையில் பன்முக நடவடிக்கைகளை செயற்படுத்த வேண்டும் என்றும் முன் மொழிவுகள் சமர்ப்பிக்கப்பட்டன.

## கிழக்கில் அதிகரித்து வரும் டெங்கு தொற்று

கிழக்கு மாகாணத்தில் டெங்கு தொற்று அதிகரித்து வருவதாக கிழக்கு மாகாண தொற்று நோயியல் பிரிவின் விசேட வைத்திய நிபுணர் வைத்தியர் எஸ். அருள்குமரன் தெரிவித்துள்ளார்.

கிழக்கு மாகாணத்தில், இதுவரையான 17 வார காலப்பகுதிக்குள் பெற்றுக் கொள்ளப்பட்ட தரவுகளின் அடிப்படையில், அண்ணளவாக 3,837 பேர் டெங்கு நோய்த் தொற்றுக்கு உள்ளாகியிருப்பதுடன், மூன்று டெங்கு மரணங்களும் பதிவாகியுள்ளன.

குறிப்பாக, மட்டக்களப்பு பிராந்திய சுகாதார பிரிவின்கீழ் 1,320 பேர் பாதிக்கப்பட்டுள்ளதுடன் மட்டக்களப்பு, ஏறாவூர் ஆகிய பிரதேசங்களில் மார்ச், ஏப்ரல் மாதங்களில் டெங்கு தொற்றுக்கு உள்ளாகின்றவர்களின் எண்ணிக்கை அதிகரித்து காணப்படுகின்றது.



இதேவேளை கல்முனை பிராந்திய சுகாதார பிரிவின்கீழ் சுமார் 1,180 பேர் பாதிக்கப்பட்டிருந்தாலும் மார்ச், ஏப்ரல் மாதங்களில் தொற்றுக்கு உள்ளானவர்களின் வீதம் குறைவடைந்துள்ளது.

திருகோணமலை மாவட்டத்தில் 1,261 பேர் தொற்றுக்குள்ளான நிலையில் மார்ச், ஏப்ரல் மாதங்களில் தொற்றின் எண்ணிக்கை அதிகரித்துள்ளது. உப்புவெளி சுகாதார பிரிவில் ஆறு, 43 வயதுடைய இரண்டு மரணங்கள் பதிவாகியுள்ளன.

நகரப்புறங்களில் நீர் பற்றாக்குறை நிலவுவதால் சுத்தமான நீரை மக்கள் சேமித்து வைத்து பயன்படுத்துகின்றார்கள். அந்தவகையில் சீமேந்து தொட்டியில் சேமித்து வைக்கின்ற தெளிவான நீர், டெங்கு நுளம்பின் பெருக்கத்துக்கு உதவுகிறது. எனவே, இதுபோன்ற நுளம்பு உட்புகக்கூடிய கலன்களிலோ, தாங்கிகளிலோ நீரை சேமித்து வைப்பதை தவிர்க்க வேண்டும். அத்துடன், வீட்டிலும் அதன் சுற்றுப் புறங்களிலும் மழைநீர் தேங்கி நிற்கக்கூடிய பிளாஸ்டிக் கோப்பைகள், இளநீர் கோம்பைகள், டயர்கள், பொலித்தீன் பைகள் போன்றவற்றையும் அகற்ற வேண்டும் எனவும் தெரிவித்தார்.

## காணி பிணக்குகள், காணி சட்டம் தொடர்பான கருத்தமர்வு

■ மன்னார் நிருபர்

மன்னார் பிரதேச செயலாளர் பிரிவில் உள்ள கிராம அலுவலர்கள், காணி தொடர்பாக கடமையாற்றும் அதிகாரிகள் ஆகியோருக்கு காணி பிணக்குகள் மற்றும் காணி சட்டம் தொடர்பாக தெளிவூட்டும் கருத்தமர்வு நேற்று முன்தினம் (10) மன்னார் பிரதேச செயலக கேட்போர் கூடத்தில் நடைபெற்றது.



மெசிடோ நிறுவனத்தின் ஏற்பாட்டில், குறித்த நிறுவனத்தின் பணிப்பாளர் ஜாட்சன் பிகிராடோ தலைமையில் நடைபெற்ற இந்தக் கருத்தமர்வில், மன்னார் பிரதேச செயலாளர் எம். பிரதீப், ஓய்வு நிலை காணி ஆணையாளர் குருநாதன் ஆகியோர் கலந்து கொண்டனர்.

இதன்போது, ஓய்வு நிலை காணி ஆணையாளர் குருநாதன், காணி தொடர்பாக பல்வேறு விளக்கங்களை வழங்கினார்.

குறிப்பாக, காணி பிணக்குகள் ஏற்படும் போது, அவற்றுக்கு எவ்வாறு இலகுவாக தீர்வு காண்பது என்பது குறித்தும் காணி சட்டங்கள் குறித்தும் தெளிவுபடுத்தப்பட்டதோடு, வருகை தந்த அதிகாரிகள் தமது சந்தேகங்களை கேட்டறிந்து கொண்டனர்.

## இடியன் துப்பாக்கி, கசிப்புடன் ஒருவர் கைது

■ செ.கீதாஞ்சன்

முல்லைத்தீவு முள்ளியவளை பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட கேப்பாபிலவு காட்டுப்பகுதியில் சட்டவிரோத நாட்டுத்துப்பாக்கி மற்றும் கசிப்பு என்பவற்றுடன் புதுக்குடியிருப்பைச் சேர்ந்த நபரை சிறப்பு அதிரடிப்படையினர் கைதுசெய்துள்ளார்கள். இந்தச் சம்பவம், செவ்வாய்க்கிழமை (09) மாலை இடம்பெற்றுள்ளது.

விசேட அதிரடிப் படையினருக்கு கிடைக்கப்பெற்ற தகவலுக்கு அமைய, கேப்பாபிலவு காட்டுப்பகுதியில் சட்டவிரோதமான முறையில் 20 லீற்றர் கசிப்பினை வைத்திருந்த நபரை கைதுசெய்தவேளை அவரிடம் இருந்த சட்டவிரோத நாட்டுத் துப்பாக்கியையும் மீட்டுள்ளார்கள்.

சந்தேக நபரையும் சான்று பொருட்களையும் முள்ளியவளை பொலிஸ் நிலையத்தில் சிறப்பு அதிரடிப்படையினரால் பாரப்படுத்தப்பட்டுள்ளது. முள்ளியவளை பொலிஸார் சட்ட நடவடிக்கையை மேற்கொண்டு, சந்தேகநபரை நீதிமன்றில் முன்னிலைப்படுத்த உள்ளனர்.

## கிளிநொச்சியில் முள்ளிவாய்க்கால் கஞ்சி

■ சுப்பிரமணியம் பாஸ்கரன்

கிளிநொச்சியில் முள்ளிவாய்க்கால் நினைவு தினத்தை அனுஷ்டிக்கும் வகையில் கஞ்சி வழங்கும் வைபவம் நேற்று (10) நடைபெற்றது.

யாழ். பல்கலைக்கழக மாணவர்களால் முன்னெடுக்கப்பட்டு வரும் முள்ளிவாய்க்கால் நினைவு கஞ்சி வழங்கும் நிகழ்வு, நேற்று முற்பகல் 09 மணிக்கு, கிளிநொச்சி கந்தசுவாமி கோவில் முன்றலில் நடைபெற்றது.

நிகழ்வின் முன்னதாக, வர்த்தகர்கள் மற்றும் வீடுகளுக்கு சென்று, பொதுமக்களிடம் பிடியரிசி பெற்று, குறித்த கோவில் முன்றலில், கஞ்சி காய்ச்சப்பட்டு விநியோகிக்கப்பட்டது.



பொது நூலகங்களை

## கணினி மயமாக்கல் செயற்றிட்டம்

■ அ. அச்சுதன்



தேசிய நூலக ஆவணவாக்கல் சேவைகள் சபையும் ஐக்கிய நாடுகள் அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்ட நிறுவனமும் (UNDP) இணைந்து, கிழக்கு மாகாணத்தில் தெரிவு செய்யப்பட்ட முக்கிய பொது நூலகங்களை, கணினி மயமாக்கல் செயற்றிட்டத்தை முன்னெடுத்துள்ளது.

இதற்கான பயிற்சி 8.05.2023 தொடக்கம் 10.05.2023 வரை திருகோணமலை முகாமைத்துவப் பயிற்சி பிரிவில் நடைபெற்றது. இதில், 45 வரையான நூலகர்கள் மற்றும் நூலக உதவியாளர்கள் கலந்து கொண்டனர்.

நிகழ்வில் தேசிய நூலக ஆவணவாக்கல் சேவைகள் சபையின் தலைவர் பேராசிரியர் நந்த தர்மரத்தின, பணிப்பாளர் வடுகே, உதவிப்பணிப்பாளர் அரவிந்த, கிழக்கு மாகாண உள்ளூராட்சி ஆணையாளர் என். மணிவண்ணன் ஆகியோர் கலந்து சிறப்பித்தமை குறிப்பிடத்தக்கது.

## ஐ.எல்.ஓவின் பங்களிப்பு அவசியம்

மலையக பெருந்தோட்டத் தொழிலாளர்களுக்கான சமூக மற்றும் பொருளாதார பாதுகாப்புக்கு சர்வதேச தொழிலாளர் சம்மேளனத்தின் (ஐ.எல்.ஓ) பங்களிப்பும் அவசியம். அதற்கான உரிய தலையீடுகளை மேற்கொள்ளுமாறு ஐ.எல்.ஓவிடம் இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் கோரியுள்ளது.

அத்துடன், மலையகத் தமிழர்கள் இலங்கைக்கு வந்து 200 வருடங்கள் நிறைவை நினைவுகூரும் வகையில் முன்னெடுக்கப்படும் ‘மலையகம் - 200’ வேலைத்திட்டங்களில் சர்வதேச தொழிலாளர் சம்மேளனம் பங்கேற்க வேண்டும் எனவும் வேண்டுகோள் விடுக்கப்பட்டுள்ளது.

சர்வதேச தொழிலாளர் சம்மேளனத்தின் உயர்மட்ட பிரதிநிதிகளுக்கும், இலங்கை தொழிலாளர் காங்கிரஸினருக்கும் இடையிலான சந்திப்பு, இ.தொ.கா. தலைமையகத்தில் புதன்கிழமை (10) நடைபெற்றது.

மேற்படி சம்மேளனத்தின் சார்பில் இலங்கைக்கான பணிப்பாளர் சிம்ரின் சிங், ஆசிய பசுபிக் பிராந்தியத்துக்கான பிரதிநிதி ஏரியல் கெஸ்ட்ரோ, நிபுணர் ஷைட் சுல்தான் அஹமட் ஆகியோரும், இலங்கை தொழிலாளர் காங்கிரஸின் சார்பில் அதன் பொதுச்செயலாளரும், அமைச்சருமான ஜீவன் தொண்டமான், தலைவர் செந்தில் தொண்டமான், நிர்வாக செயலாளர் விஜயலக்ஷ்மி தொண்டமான், தொழிற்சங்க பிரிவின் சிரேஷ்ட பணிப்பாளர் எஸ்.ராஜமணி ஆகியோரும் பங்கேற்றனர்.



மலையக பெருந்தோட்டத் தொழிலாளர்கள் உட்பட தொழிலாளர்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகள், அவர்களுக்கான பாதுகாப்பு பொறிமுறை, சர்வதேச தொழில் சம்மேளனத்தின் வகிபாகம் உள்ளிட்ட விடயங்கள் சம்பந்தமாகவும் இதன்போது கலந்துரையாடப்பட்டன.

பெருந்தோட்டத் தொழிலாளர்கள் விவகாரத்தில் ஐ.எல்.ஓ வழங்கிவரும் ஒத்துழைப்புகளுக்கு நன்றி தெரிவித்த அமைச்சர் ஜீவன் தொண்டமான், எதிர்காலத்திலும் ஒத்துழைப்புகள் அவசியம் எனவும் கேட்டுக்கொண்டார்.




# படங்களில் ஒன்றாக இருக்கும் கடவுள்களை மலைகளில் பிரிக்கின்றனர்

பொதுப் போக்குவரத்து வாகனங்களில் பயணம்செய்யும் பயணிகள், திடீரென எழுந்து கைகூப்பியபடி வணக்கம் செலுத்துவர்; இல்லையேல் தங்களுடைய நெஞ்சை தொட்டு கண்களை ஒருசில நிமிடங்கள் மூடிக்கொண்டு, ஏதாவது முணுமுணுப்பர். பெரும்பாலான பயணிகள் இதனை அவதானித்திருக்கக்கூடும். அவ்வாறு செய்யும் பயணிகளை அவதானித்தால், ஏதாவது ஒரு மதத்துக்கு உரிய வணக்கஸ்தலத்தை அந்த பஸ் கடந்து சென்றுகொண்டிருக்கும்.

ஒருசில பயணிகள், எந்த மதத்துக்குரிய வணக்கஸ்தலமாக இருந்தாலும் பரவாயில்லை என்று, கோவில்கள், விகாரைகள், தேவாலயங்களை கண்டவுடன், தமது இருக்கையில் எழுந்து, வணக்கம் செலுத்துவர். பஸ்களில் பயணிக்கும் இஸ்லாமியர்கள் பலர், கைகளில் மாலையொன்றை வைத்துக்கொண்டு, முணுமுணுத்துக்கொண்டிருப்பர்.

பல்லின மக்களும் பல மதங்களைச் சேர்ந்தவர்களும் வாழுகின்ற நமது நாட்டில், தங்களுடைய மத விவகாரங்களை பலரும் முறையாக கடைப்பிடித்துக்கொண்டுதான் இருக்கின்றனர்.

பொதுப் போக்குவரத்தை பயன்படுத்தும் பயணிகள், சகல மதங்களைச் சேர்ந்த கடவுள்களின் உருவப்படங்களை கண்டிருக்கக்கூடும். அப்படியாயின், எந்த இனமாக இருந்தாலென்ன, மதத்தைச் சேர்ந்தவராக இருந்தாலென்ன, அனைவரையும் காப்பாற்றி அழைத்துச் செல்லவேண்டுமென, அந்த பஸ்களின் சாரதி, நடத்துநர் நினைக்கின்றார்கள்.

இல்லையேல், தாங்கள் வழிபாடும் மதங்களைச் சார்ந்த கடவுளின் படங்களை மட்டுமே வைத்திருப்பர். எனினும், வடக்கு,கிழக்கு மற்றும் மலையகத்தை பொறுத்தவரையில், உயரமான மலையுச்சிகள், கேந்திர முக்கியத்துவம் வாய்ந்த இடங்கள், பிரதான சந்திகளில் புத்தர் சிலைகள் வைக்கப்பட்டு, இடங்கள் ஆக்கிரமிக்கப்படுகின்றன.

இலங்கை ஜனநாயக சோஷலிஸ குடியரசின் அரசியலமைப்பின் பிரகாரம் மதங்களைப் பின்பற்றுவதற்கு சகலருக்கும் உரிமையுண்டு. ஆனால், அடாத்தாக செய்வது, இனங்களுக்கு இடையில் வீணான மனக்கசப்புகளை தோற்றுவிக்கும்.

இந்நிலையில், பாராளுமன்றத்தில் செவ்வாய்க்கிழமை (09) உரையாற்றிய சரத் வீரசேகர, "பௌத்த சின்னங்கள் மீதே சிவலிங்கங்கள் பிரதிஷ்டை செய்யப்படுகின்றன. ஆகையால், தமிழ்த் தரப்பினருடன் பேச்சுவார்த்தை ஆரம்பிப்பதற்கு முன்னர், இனப்பிரச்சினை உள்ளதா என்பது தொடர்பில் ஆராயவேண்டும்" என வலியுறுத்தியுள்ளார்.

இவ்விரு பிரச்சினைகளும் வேறுவேறானவை; எனினும், இரண்டையும் முடிச்சுப்போட்டு, கதையளக்கும், வீரசேகர, வெடுக்குநாறி மலைக்கு, கடந்த வெசாக் தினத்தன்று சென்றுதிரும்பியவர். அவருடைய கூற்றை ஆழமாக நோக்கினால், புதிதாக பௌத்த விகாரைகளை நிர்மாணிக்கவேண்டிய தேவை என்ன? இவையெல்லாம் ஆக்கிரமிக்கும் செயற்பாடுகளாகும்.

சாதாரண மனிதர்கள் ஓரணியில் திரண்டு, ஒன்றாக ஒன்றுமையாக வாழ விரும்புகின்றார்கள் என்பது, 2023 வெசாக் தினத்தன்று நடத்தப்பட்ட தன்சல்களை பார்த்தால் தெரியும்.

எனினும், ஒருசில அரசியல்வாதிகளும், இனவாதிகளுமே பிரித்தாள முயல்கின்றனர். ஆகையால்தான், பொதுப்போக்குவரத்து, வியாபார ஸ்தலங்களில் காட்சிப்படுத்தப்பட்டிருக்கும் படங்களில் ஒன்றாக இருக்கும் கடவுள்களை மலைகளுக்குக் கொண்டுச்சென்று பிரிக்கின்றனர். இது மனக்கசப்பை ஏற்படுத்தும் என்பதே உண்மை.

தமிழ்Mirror க்கு எழுதுங்கள்
www.tamilmirror.lk



தமிழ்மிரர் வாசகர்களுக்கு வணக்கம். எமது பத்திரிகைக்கு உங்களுடைய ஆக்கங்கள், விமர்சனங்களை அனுப்பிவைக்கலாம். கருதுகளையும் வரவேற்கின்றோம்.

அத்துடன் உங்கள் பிரதேசங்களில் இடம்பெறும் விளையாட்டு, கலை, கலாசார நிகழ்வுகளை புகைப்படங்களுடன் அனுப்பிவைக்கலாம்.

பிரதேசத்தில் நிலவும் பிரச்சினைகள் தொடர்பிலும் எழுதலாம்.

அனுப்பவேண்டிய முகவரி
தமிழ்மிரர்
ஆசிரியர் பீடம்
No 8. Hunupitiya Cross Road, Colombo 2. P.O. Box 1136

Editorial: Tel: 011 2 479 372-8, Fax: 011 2 304 114
Marketing Manager (Dir.) 011 2 479 822, 077 3421 476
Circulation Manager (Dir.) 011 2 479 672, 077 3 219 775,
Subscription Manager (Dir.) 011 2 479 626, 011 2 479 628, 077 3 502 183
E-mail: tamilmirror@wijeya.lk




# தமிழ் மக்களை பிரித்தாள நினைக்கும் ரணில்



புருஜோத்தமன் தங்கமயில்

தென் இலங்கையின் அரசியல் உத்திகளில் ஒன்றான, பிரித்தாளும் தந்திரத்தோடு ரணில் விக்கிரமசிங்க, இம்முறை தமிழ் மக்களை நோக்கி வந்திருக்கிறார்.

வடக்கு மாகாணத்தைப் பிரதிநிதித்துவப்படுத்தும் தமிழ்ப் பாராளுமன்ற உறுப்பினர்களை மாத்திரம் பேச்சுவார்த்தைக்கு அழைத்துள்ளதன் மூலம், அவர் அதனை முன்னெடுக்க முயல்கிறார். இன்று வியாழக்கிழமை முதல் தொடர்ந்து மூன்று நாள்கள் அதிகாரப்பரவலாக்கம், வடக்கு அபிவிருத்தி பற்றி பேச்சுவார்த்தை நடைபெறும் என்று ஜனாதிபதி தரப்பு அறிவித்திருக்கின்றது.

இந்தப் பேச்சுவார்த்தையில் கிழக்கு மாகாணத்தைப் பிரதிநிதித்துவப்படுத்தும் தமிழ்ப் பாராளுமன்ற உறுப்பினர்கள் அழைக்கப்படாதுவிடத்து, அதில் கலந்து கொள்ளப் போவதில்லை என்று தமிழ்த் தேசிய கூட்டமைப்பின் பாராளுமன்றக் குழுத் தலைவரான இரா. சம்பந்தன் அறிவித்திருக்கிறார். அத்தோடு, கிழக்கு பாராளுமன்ற உறுப்பினர்களை உடனடியாக அழைக்க வேண்டும்; அதன் மூலம் பேச்சுவார்த்தை நடைபெறுவதற்கான சூழலை ஜனாதிபதி ஏற்படுத்த வேண்டும் என்றும் வலியுறுத்தியிருக்கின்றார்.

அதுபோலவே, கூட்டமைப்பின் பங்காளிக் கட்சிகளான டெலோ, புளொட்டின் தலைவர்களும் வடக்கைப் பிரதிநிதித்துவப்படுத்தும் பாராளுமன்ற உறுப்பினர்களை மாத்திரம் பேச்சுவார்த்தைக்கு அழைத்து உள்ளமையை கண்டித்துள்ளதோடு, அதில் கலந்து கொள்ளப்போவதில்லை என்றும் அறிவித்திருக்கிறார்கள்.

இது தொடர்பாக, இரா. சம்பந்தன் வெளியிட்டுள்ள ஊடக அறிவித்தலில், பேச்சுவார்தைதை மூலம் தீர்வு காணப்பட வேண்டும் என்பதில், கூட்டமைப்பு அர்ப்பணிப்போடு இருக்கின்றது. அதிலும், சர்வதேச கண்காணிப்போடு அந்தப் பேச்சுவார்த்தைகள் இடம்பெற வேண்டும் என்று விரும்புகின்றது என்றும் அறிவித்துள்ளதோடு, பேச்சுவார்த்தைக்கு கிழக்கு தமிழ்ப் பாராளுமன்ற உறுப்பினர்கள் அழைக்கப்பட வேண்டும் என்றும் வலியுறுத்தியிருக்கின்றார்.

தமிழ்க் கட்சிகள் ரணிலின் அழைப்பை ஏற்பதானால், அந்தப் பேச்சுவார்த்தையில் சம்பந்தன் கூட கலந்து கொள்ள முடியாத நிலை ஏற்படும். ஏனெனில், அவர் திருகோணமலையைப் பிரதிநித்துவப்படுத்தும் உறுப்பினர். இப்படியான சின்னச் சின்ன விடயங்கள் எல்லாமும் பல்லிளிக்கும் அளவுக்கு தெளிவாக இருக்கின்றன.

இந்த வருட இறுதிக்குள், தமிழ் மக்களின் அரசியல் பிரச்சினைகளுக்கு தீர்வு காணும் முனைப்போடு தான் இருப்பதாக ரணில் தொடர்ச்சியாக அறிவித்து வருகிறார். ஏற்கெனவே அவர் கடந்த சுதந்திர தினத்துக்கு முன்னர், தீர்வு காணப்படும் என்று கூறியது குறிப்பிடத்தக்கது. அது தொடர்பில் அவர், தமிழ்த் தேசிய கட்சிகளின் பாராளுமன்ற உறுப்பினர்களோடு பேச்சுவார்த்தைகளையும் நடத்தியிருந்தார்.

ஆனால், அந்தப் பேச்சுவார்த்தையில் தமிழ்ப் பாராளுமன்ற உறுப்பினர்களால் முன்வைக்கப்பட்ட கோரிக்கைகள் அனைத்தும் கணக்கில் எடுக்கப்படாது, குப்பையில் தூக்கி வீசப்பட்டன. இராணுவம் உள்ளிட்ட அரச படையினரால் ஆக்கிரமிக்கப்பட்டுள்ள தமிழ் மக்களின் காணிகள் விடுவிப்பு, தொல்லியல் திணைக்களம், வனவளத் திணைக்களம், மகாவலி அதிகார சபை உள்ளிட்ட தமிழ் மக்களின் காணிகளையும், பாரம்பரிய சொத்துகளையும் ஆக்கிரமித்து அடாத்தாக பௌத்த கட்டுமானங்கள் தொடங்கி, சட்டத்துக்கு முரணான செயற்பாடுகளில் ஈடுபடுவது உடனடியாக நிறுத்தப்பட வேண்டும்; தமிழ் அரசியல் கைதிகளின் விடுதலை என்பன உடனடியாக சாத்தியப்படுத்தப்பட வேண்டும் என்று தமிழ்த் தரப்பு ஜனாதிபதியிடம் ஏற்கெனவே வலியுறுத்தியிருந்தது.

ஆனால், அவை தொடர்பில் எந்தவித முன்னோக்கிய செயற்பாடுகளையும் ஜனாதிபதியோ, அரசோ செய்யவில்லை. மாறாக, தனியார் காணிகளில் விகாரைகளை அமைப்பது உள்ளிட்ட அடாத்தான வேலைகளை இராணுவமும் தொல்லியல் திணைக்களமும் செய்வதற்கான வாய்ப்புகளை ஏற்படுத்திக் கொடுக்கும் வேலைகளிலேயே அரசு ஈடுபட்டிருக்கின்றது.

தொடர்ந்து தமிழ் மக்களை சீண்டும் வேலைகளை ரணிலும் அவரது அரசாங்கமும் செய்கின்றது. தீர்க்கமான அரசியல் பேச்சுவார்த்தைகளை முன்னெடுப்பதற்கு முதல், பரஸ்பர நம்பிக்கையை கட்டியெழுப்பும் முகமாக, செய்யவேண்டிய தமிழ் மக்களின் சில கோரிக்கைகளைக்கூட நிறைவேற்றுவதற்கு தயாராக இல்லாத ரணில், அரசியல் பிரச்சினைகளுக்கான தீர்வைக் காணுவதற்கு அர்ப்பணிப்போடு இருக்கிறார் என்று எப்படி நம்ப முடியும்?

ஏனெனில், தமிழ் மக்களின் பிரச்சினைகள் குறித்து பேசுவதற்கு ஏன், வடக்குத் தமிழ்ப் பாராளுமன்ற உறுப்பினர்களை மாத்திரம் பேச்சுவார்த்தைக்கு அழைக்க வேண்டும்? இந்தப் பிரித்தாளும் தந்திரத்தினூடாக, தமிழ் மக்களை வடக்கு, கிழக்கு என்று இரு கூறுகளாக பிரித்தாள முடியும் என்று அவர் நம்புகிறார்.

ஏற்கெனவே, தமிழீழ விடுதலைப் புலிகளில் இருந்து 'கருணா அம்மான்' என்கிற விநாயகமூர்த்தி முரளிதரனை பிரித்தெடுத்திருந்தார். அதன்மூலம், புலிகளை இரண்டாக பிளக்கலாம் என்று நம்பினார். இப்போது, புலிகளின் காலத்துக்குப் பின்னரான தமிழர் அரசியலிலும் பிளவை ஏற்படுத்தி, தமிழ் மக்களின் கோரிக்கைகளை வலுவிழக்கச் செய்யலாம் என்பது ரணிலின் நகர்வு.

தமிழ் மக்களை தொடர்ச்சியாக அடக்கி ஒடுக்க வேண்டும் என்பது தென் இலங்கையின் பௌத்த சிங்கள மேலாதிக்க சக்திகளின் நிலைப்பாடு. அதற்கு, தமிழ் மக்கள் ஓரணியில் திரள்வதை தடுப்பதற்கான சதித்திட்டங்களை அவர்கள் தொடர்ந்து மேற்கொண்டு வந்திருக்கிறார்கள். அதற்காக கருணா தொடங்கி பலரையும் பயன்படுத்தவும் செய்திருக்கிறார்கள்.

ஆனால், தமிழ் மக்கள், தமது பாரம்பரிய நிலமாக வடக்கு- கிழக்கை கருதுவதிலிருந்து எந்தக் காலத்திலும் பின்நின்றதில்லை. ஏனெனில், அது, ஆயிரக்கணக்கான ஆண்டுகளாக கடத்தப்படும் உரிமைக்கான உணர்வு.

வடக்கு, கிழக்கு என்று தமிழ் மக்களை பிரித்தாண்டுவிடலாம் என்று தென் இலங்கை காலங்காலமாக முயன்று வந்திருக்கின்றது. அதற்காக, தங்களின் ஏவல் குழுக்களையும், நிறுவனங்களையும் கொண்டு படுபயங்கர ஆட்டங்களை எல்லாம் ஆடியிருக்கின்றது.

ஆனால், அந்தப் பிரித்தாளும் தந்திரங்களை எல்லாம் தாண்டி, தமிழ் மக்கள் ஓரணியில் நின்றிருக்கிறார்கள். அது, பிரதேசவாதம் என்கிற குறுகிய சிந்தனைகளுக்கு அப்பால், தேசிய விடுதலை, சுதந்திர உணர்வு சார்ந்தாக எழுந்து வந்த அரசியலின் விளைவால் ஏற்பட்டது. அதனை எந்தவொரு தருணத்திலும் தமிழ் மக்களும், அவர்களின் அரசியலை முன்னெடுக்கிற தரப்புகளும் கைவிட முடியாது.

எண்ணிக்கை அடிப்படையில் நாட்டில் சிறுபான்மைகளாக இருக்கும் தமிழ், முஸ்லிம் மக்கள், ஓரணியில் திரண்டுவிடக்கூடாது என்பதில் தென் இலங்கை சுதந்திரத்துக்கு முன்னர் இருந்து கவனமாக இருந்திருக்கின்றது; அதில் வெற்றியும் பெற்றிருக்கின்றது.

தமிழ், முஸ்லிம் மக்களுக்கு இடையிலான முரண்பாடுகளை தூபமிட்டு வளர்த்து, அதில் குளிர்காய்ந்தது தென் இலங்கை. இன்றைக்கு கடந்த கால முரண்பாடுகள் அளவில் இல்லை என்றாலும், கடந்த கால கறுப்பு பக்கங்களை தமிழ், முஸ்லிம் மக்கள் சுமக்க வேண்டி வந்திருக்கின்றது.


அந்த வெற்றியைச் சுவைத்துக் கொண்டிருக்கும் தென் இலங்கை, வடக்கு - கிழக்கு என்று தமிழ் மக்களை துண்டாடுவதன் மூலம், தமிழ் மக்கள் என்பது வடக்கில், அதுவும் யாழ்ப்பாணத்துக்குள் இருக்கும் சில இலட்சம் பேர் என்று சர்வதேசத்திடம் நிறுவும் முயற்சிகளில் ஈடுபடுகின்றது.

கிழக்கு மாகாணத்தில் பௌத்த அடையாளங்களை வலிந்து நிறுவுவதன் மூலமும், காணி ஆக்கிரமிப்பின் மூலமும் முக்கால் வாசிக்கும் மேலான நிலத்தை பௌத்த சிங்கள மேலாதிக்கம் விழுங்கிவிட்டது. வடக்கிலும் முல்லைத்தீவு, வவுனியா மாவட்டங்களில் அரைவாசிப் பகுதிகளை அரச திணைக்களங்கள் ஆக்கிரமித்துவிட்டன. அங்கு, பௌத்த அடையாளங்கள் திணிக்கப்படுகின்றன. யாழ்ப்பாணத்திலும் இராணுவ ஆக்கிரமிப்பிலுள்ள வலிகாமத்தில் சட்டத்துக்கு முரணாக தனியார் காணிகளில் விகாரைகள் கட்டப்படுகின்றன.

இவ்வாறாக, தமிழ் மக்களின் இருப்பை முழுவதுமாக கேள்விக்குள்ளாக்கும் வேலைகளை தென் இலங்கை எந்தவித தயக்கமும் இன்றி, முன்னெடுத்து வருகின்றது. இந்தச் செயற்றிட்டத்தின் புதிய காவலனாக ரணில் இப்போது இருக்கின்றார்.

டீ.எஸ்.சேனநாயக்க தொடங்கி, பண்டாரநாயக்க, ஜே.ஆர் ஜெயவர்தன, மஹிந்த ராஜபக்ஷ என்று பௌத்த சிங்கள மேலாதிக்க சக்திகளின் காவலர்களின் முகங்கள் மாறியிருக்கின்றன. ஆனால், அவர்களின் செயற்பாடுகளில் எந்தவொரு காலத்திலும் மாற்றம் ஏற்பட்டதில்லை. இப்போது ரணில் அந்த முயற்சிகளில் ஈடுபடுகிறார்.

இதைப் புரியாது, ரணிலுக்கு வெள்ளையடிக்கும் சக்திகள், தமிழ் மக்களுக்கு எதிரான அருவருப்பான ஆக்கிரமிப்பு அரசியலுக்கு துணைபோகிறார்கள். அதனை தமிழ் மக்கள் தெளிவாகப் புரிந்து கொள்ள வேண்டும்.



## வாழ்வியல் தரிசனம்

உயிர் உள்ள போதுதான் உறவுகள் என்கின்றனர். அது பொய்! எமது உறவுகள், எங்கள் பரம்பரையினர் இரண்டாயிரது ஒன்பதாம் ஆண்டு இடம்பெற்ற அழிப்பில் எங்களை விட்டு ஏகினர். இந்தச் சோகம், எங்களை இன்னும் வாட்டுகின்றது. தமிழர்கள் முப்பது ஆண்டுகளாகத் தங்களது உரிமைகளுக்காகப் போராடினார்கள். தொடர்ந்து முப்பது ஆண்டுகளாக எந்த வசதிகளும் இல்லை. மின்சாரம், எரிசக்தி என எவையும் எமக்குக் கிடைக்கவில்லை. நடந்த கொடுமைகளைச் சொல்லி முடியாது.

கண்ணாடிப் போத்தலில், தேங்காய் எண்ணெயில் திரி அல்லது கடதாசி வைத்து, விளக்கு எரித்துப் படித்தார்கள். அந்த நிலையிலும் கல்வியை எமது மாணவர்கள் கைவிடவே இல்லை.

எந்த நேரமும் குண்டுச் சத்தங்கள், அடிக்கடி மரணங்கள், மரண ஓலங்கள்; கோவில், தேவாலயங்கள் என எவற்றையும் பேரினவாதம் கண்டுகொள்ளவில்லை. பல தேவாலயங்களில் குண்டுவீச்சு. வாகன வசதிகள் இல்லை. சைக்கிள் பயணங்கள்தான்! பயணமே பயங்கரம்.

ஆனால், எம்மவர்கள் சளைக்கவில்லை. விவசாயம் செய்தனர். போர்க்காலத்திலும் எங்களை நாங்கள் பார்த்துக்கொண்டோம்.

தற்போது என்ன நடக்கிறது? எமது நாட்டின் நிலையை உலகமே அறியும். அநியாயம் நிலைக்காது என ஆன்மிகம் சொல்லுகின்றது.

–பருத்தியூர் பால. வயிரவநாதன்

## கடிதங்கள்

பயணிகள் தரிப்பிடத்தை

### புனரமைக்குமாறு வேண்டுகோள்



அக்கரைப்பற்று - கல்முனை பிரதான வீதியில், தொழில்நுட்ப கல்லூரிக்கு அருகாமையில் அமைந்துள்ள பயணிகள் தரிப்பிடத்தின் கூரை, பல வருடங்களாக உடைந்த நிலையில் உள்ளது. இதனால், பயணிகள் தரித்து நிற்க முடியாத நிலை காணப்படுகின்றது.

கடுமையான வெப்பம் நிலவும் வானிலையின் போதும் மழை பெய்யும் வானிலையின் போதும், தொழில்நுட்பக் கல்லூரி மாணவர்களும், பொது மக்களும், இந்தப் பயணிகள் தரிப்பிடத்தில் தரித்து நின்று, பஸ்களில் பயணிக்க முடியாத நிலையில் உள்ளனர்.

எனவே, இதற்குப் பொறுப்பானவர்கள் உடனடியாகப் புனரமைத்து, இயற்கையின் சீற்றத்திலிருந்து பயணிகளைப் பாதுகாத்து, சௌகரியமான பயணத்துக்கு வழிசமைக்குமாறு பொதுமக்களும், தொழில்நுட்பக் கல்லூரி மாணவர்களும் வேண்டுகோள் விடுக்கின்றனர்.

–எம்.எல்.எஸ் டீன்



# பிக்பொக்கட் அடித்துவிட்டு கத்தும் பிக்பொக்கட்காரன்

எம்.வி. எக்ஸ்பிரஸ் பேர்ள் கப்பல் விடயத்தில் பிக்பொக்கட் அடித்துவிட்டு மக்களுடன் மக்களாக திருடன், திருடன் எனக் கத்தும் பிக்பொக்கட் காரனாக நீதி அமைச்சர் விஜேதாஸ ராஜபக்ஷ நடிப்பதாக சந்தேகம் ஏற்பட்டுள்ளதென ஐக்கிய மக்கள் சக்தியின் எம்.பி.யான துஷார இந்துனில் தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் நேற்று புதன்கிழமை இடம்பெற்ற எம்.வி.எக்ஸ்பிரஸ் பேர்ள் கப்பல் விபத்து தொடர்பான சபை ஒத்திவைப்பு விவாதத்தில் உரையாற்றும் போதே இவ்வாறு தெரிவித்த துஷார இந்துனில் எம்.பி. தொடர்ந்து பேசுகையில், எம்.



வி.எக்ஸ்பிரஸ் பேர்ள் கப்பல் கொழும்பு துறைமுகத்தை அண்மித்த கடற்பரப்பில் மூழ்கிய விபத்து தொடர்பில் மக்கள் மத்தியில் மாறுபட்ட பல நிலைப்பாடுகள் காணப்படுகின்றன. இந்த விவகாரம் தேசிய பிரச்சினையாக காணப்படுகிறது.கப்பல் விபத்தால் கடல் வளங்களுக்கு ஏற்பட்ட பாதிப்புகளுக்கு உரிய நிறுவனத்திடமிருந்து நட்டஈட்டை பெற்றுக் கொள்ள பொறுப்புக் கூற வேண்டிய தரப்பினர்கள் முறையாக செயற்பட்டார்களா என்ற சந்தேகம் உள்ளது.

சுற்றாடல் அமைச்சின் விடயதானங்களுக்குள் உள்ளங்கப்பட வேண்டிய கடல் வளங்கள் பாதுகாப்பு அதிகாரசபை, வீடமைப்பு அபிவிருத்தி அமைச்சின் விடயதானங்களுக்குள் உள்வாங்கப்பட்டுள்ளது.இது பொருத்தமற்றது.

எம்.வி எக்பிரஸ் பேர்ள் கப்பல் விவகாரத்தை பாராளுமன்றத்தில் விவாதிப்பது சட்டவிரோதமானது என நீதியமைச்சர் குறிப்பிடுகிறார். ஆனால் நட்ட ஈடு பெற்றுக்கொள்வதை தடுக்கும் வகையில் சாமர குணசேகர என்பவருக்கு 250 மில்லியன் டொலர் இலஞ்சம் வழங்கப்பட்டதாக குறிப்பிட்டது மாத்திரம் சட்டத்துக்கு முரணானதில்லையா? இந்த 250 மில்லியன் டொலர் இலஞ்சம் விவகாரத்தின் உண்மை தன்மை முதலில் ஆராயப்பட வேண்டும்.

பொது இடத்தில் பிக்பொக்கட் அடித்துவிட்டு மக்களுடன் மக்களாக நின்று திருடன், திருடன் எனக் கத்தும் பிக்பொக்கட் காரனாக நீதி அமைச்சர் விஜேதாஸ ராஜபக்ஷ நடிப்பதாக சந்தேகம் ஏற்பட்டுள்ளது என்றார்.

# "6.4 பில்லியன் அ.டொலர் நஷ்ட ஈட்டைக் கோரியுள்ளோம்"

" "எக்ஸ்பிரஸ் பேர்ள் கப்பலால் ஏற்பட்ட பாதிப்புகளுக்கான நஷ்ட ஈட்டை பெற்றுக்கொள்வதற்கு தேவையான நடவடிக்கைகளை அரசாங்கம் முன்னெடுத்து வருகின்றது" என்று வெளிவிவகார அமைச்சர் அலிசப்ரி தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் நேற்று புதன்கிழமை நடைபெற்ற இலங்கைக் கடலில் விபத்துக்கு உள்ளான எக்ஸ்பிரஸ் பேர்ள் கப்பலால் ஏற்பட்ட பாதிப்புகளுக்கான நஷ்ட ஈடு தொடர்பான சபை ஒத்தி வைப்புவேளை விவாதத்தில் உரையாற்றும் போதே அவர் இதனை தெரிவித்தார்.

அதன்போது அவர் மேலும் கூறுகையில், எக்ஸ்பிரஸ் பேர்ள் கப்பல் விபத்துக்கு உள்ளான பின்னர் நாம் இதனுடன் தொடர்புடைய தரப்பினரை ஒன்றிணைத்து நடவடிக்கைகளை முன்னெடுத்திருந்தோம். இது தொடர்பில் ஆராய்வதற்காக 5 உப குழுக்களும் அமைக்கப்பட்டன. இதேவேளை பல்வேறு துறையினரை கொண்ட நஷ்ட ஈட்டுக்கான மதிப்பீட்டு நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டன.

இந்நிலையில் சிங்கபூரில் நாங்கள் முன்னெடுத்துச் செல்லும் வழக்கு விசாரணைகள் சிக்கல்கள் இன்றி முன்னெடுக்கப்பட வேண்டும். இது இலங்கை அரசை பிரதிநிதித்துவப்படுத்தி முன்னெடுக்கும் நடவடிக்கையாகும். இதன்போது



சுற்றாடல் பாதிப்புகளை நிரூபிக்க வேண்டும். அதற்கான நடவடிக்கைகள் முன்னெனடுக்கப்படுகின்றன. 6.4 பில்லியன் அமெரிக்க டொலர் நஷ்ட ஈட்டையே நாங்கள் கோரியுள்ளோம்.

அந்த கப்பலால் ஏற்பட்ட பாதிப்புகளுக்கு நிச்சயமாக நஷ்ட ஈட்டை செலுத்தியே ஆக வேண்டும். ஆனால் எதிர் தரப்பில் நஷ்ட ஈட்டுக்கான நடவடிக்கைகளில் குறைபாடுகள் இருப்பதாக கூறுகின்றனர். எவ்வாறாயினும் நாங்கள் அதனை பெற்றுக்கொள்ள தேவையான நடவடிக்கைகளை முன்னெடுப்போம் என்றார்.

# "நட்டஈட்டை அதிகரிக்க வேண்டும்" –சஜித் பிரேமதாஸ

"நாட்டின் சுற்றுச் சூழல் பாதுகாப்பு தொடர்பில் முறையான வேலைத்திட்டங்கள் முன்னெடுக்கப்படாது இருக்கின்றது" என்று எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ தெரிவித்துள்ளார்.

பாராளுமன்றத்தில் நேற்று புதன்கிழமை நடைபெற்ற, இலங்கை கடலில் விபத்துக்கு உள்ளான எக்ஸ்பிரஸ் பேர்ள் கப்பலால் ஏற்பட்ட பாதிப்புகளுக்கான நட்டஈடு தொடர்பான சபை ஒத்தி வைப்புவேளை விவாதத்தில் உரையாற்றும் போதே எதிர்க்கட்சித் தலைவர் இதனை தெரிவித்தார்.

அதன்போது அவர் மேலும் கூறுகையில், எக்ஸ்பிரஸ் பேர்ள் கப்பல் விபத்தால் கடல் வளத்திற்கும் மீனவர்களின் வாழ்வாதரத்திற்கும் பெரும் பாதிப்பு ஏற்பட்டிருந்தது. இந்தச் சம்பவம் 2021 மே மாதத்தில் நடந்துள்ளது. இந்தச் சம்பவத்திற்கு முன்னர் 'நியூ டயமன்ட்' கப்பல் விபத்தால் பேரழிவு ஏற்பட்டது. இது 2020 செப்டெம்பரில் நிகழ்ந்தது. உலகில் பல நாடுகளில் சுற்றுச் சூழல் பாதுகாப்பு, பசுமை சுற்றாடல் என்பன முறையாக பேணப்படுகின்றன. ஆனால், இங்கே பெயரளவிலேயே இது



நடக்கின்றது. அமைச்சர்களின் நியமனத்தின் மூலம் இதனை புரிந்துகொள்ள முடியும்.

நியூ டயமன்ட் சம்பவத்திற்கு பின்னர் அரசாங்கம் என்ன நடவடிக்கை எடுத்தது? அதேபோன்ற விடயங்களை தடுக்க எடுத்த நடவடிக்கை என்ன? அவ்வாறு செய்திருந்தால் எக்ஸ்பிரஸ் பேர்ள் கப்பலால் ஏற்பட்டிருக்கும் அழிவுகளைத் தடுத்திருக்கலாம்.

சர்வதேச துறைமுகங்கள் இரண்டால் நிராகரிக்கப்பட்ட கப்பல் எப்படி இலங்கை கடலுக்கு வந்தது? இதற்கு அனுமதி வழங்கிய தேசத் துரோகி யார்? உலக தரப்படுத்தலில் எமது துறைமுகத்திற்கு முதன்மை இடம் உள்ளது. அந்தக் கப்பலில் பாகங்களை எடுத்துச் செல்ல அனுமதி வழங்கியது யார்?

விசேட நிபுணர்களின் குழுவொன்று பாதிப்பு மதிப்பீடுகளை மேற்கொண்டுள்ளது. 6.4 பில்லியன் டொலர் என்று மதிப்பீடு செய்யப்பட்ட போதும், அந்தக் கப்பலை சுற்றி 100 மீற்றரை சுற்றி எவருக்கும் செல்ல முடியாது என்று கப்பல் நிறுவனம் தடை போட்டிருந்தது.

எமது கடலில் எப்படி இது அனுமதிக்கப்பட்டது? முறையாக மதிப்பீட்டை செய்திருந்தால் நட்ட ஈட்டை அதிகமாக பெற நடவடிக்கை எடுத்திருக்கலாம்.

சர்வதேச நாணய நிதியத்தின் ஊடாக 2.5 பில்லியன் டொலர் கடனே கிடைக்கின்றது. ஆனால், எக்ஸ்பிரஸ் பேர்ள் கப்பலால் கிடைக்கும் நட்டஈடு அதனை விடவும் அதிகமாக இருக்கின்றது. ஆனால், இந்த நடவடிக்கைகளில் முறையான செயற்பாடுகள் முன்னெடுக்கப்படவில்லை. 6.4 பில்லியனுக்கும் அதிகமான நட்ட ஈட்டை பெறலாம். அதனை செய்ய நடவடிக்கை எடுக்க வேண்டும்" என்றார்.

# உண்ணாட்டரசிறை சட்டமூலத்தை சபாநாயகர் சான்றுரைப்படுத்தினார்

இலங்கை அரசியலமைப்பின் 79 ஆம் இலக்க உறுப்புரையின் பிரகாரம், 2023 மே மாதம் 8 ஆம் திகதி "உண்ணாட்டரசிறை (திருத்தம்)" எனும் சட்டமூலத்தை சான்றுரைப்படுத்தியதாக சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்தன நேற்று புதன்கிழமை பாராளுமன்றத்தில் அறிவித்தார்.



இந்தச் சட்டமூலம் கடந்த ஏப்ரல் 28 ஆம் திகதி பாராளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்டது. அதற்கமைய, சபாநாயகர் சான்றுரைப்படுத்தியதை அடுத்து உண்ணாட்டரசிறை (திருத்தம்) சட்டமூலம், 2023 ஆம் ஆண்டின் 04 ஆம் இலக்க உண்ணாட்டரசிறை (திருத்தம்) சட்டமாக நடைமுறைக்கு வருகின்றது.

# இருதரப்பு வாய்த்தர்க்கங்களால் 10 நிமிடம் சபை முடங்கியது

எக்ஸ்பிரஸ் பேர்ள் கப்பல் விபத்து தொடர்பான வழக்கு விசாரணை இடம்பெற்றுக்கொண்டிருக்கையில், அது தொடர்பான விடயங்களை விவாதிப்பது தேசத்துரோகம்; விவாதத்தில் பங்கேற்போர் தேசத்துரோகிகள் என நீதி அமைச்சர் விஜேதாஸ ராஜபக்ஷ முன்வைத்த குற்றச்சாட்டாலும் விவாதத்தை நடத்தியே தீர வேண்டுமென்ற எதிர்க்கட்சிகளின் வலியுறுத்தலாலும் ஏற்பட்ட தர்க்கத்தையடுத்து, பாராளுமன்ற நடவடிக்கை சபாநாயகரால் 10 நிமிடம் ஒத்திவைக்கப்படுவதாக அறிவிக்கப்பட்ட நிலையில், ஒரு மணித்தியாலமும் 45 நிமிடமும் சபை நடவடிக்கைகள் நிறுத்தப்பட்டு, மீண்டும் கூடிய நிலையில் சில கட்டுப்பாடுகளுடன் விவாதத்தை தொடர சபாநாயகர் அனுமதியளித்தார்.

எக்ஸ்பிரஸ் பேர்ள் கப்பல் தீப்பற்றியதால் ஏற்பட்ட பாதிப்பு தொடர்பான சபை ஒத்திவைப்பு வேளை பிரேரணை மீதான விவாதம் ஆரம்பிக்கப்பட்டது.

பிரேரணையை முன்மொழிந்து ஐக்கிய மக்கள் சக்தி எம்.பி. துஷார இந்துனில் உரையாற்ற ஆரம்பித்தபோது, ஒழுங்கு பிரச்சினை ஒன்றை எழுப்பிய, நீதி அமைச்சர் விஜேதாஸ ராஜபக்ஷ, எக்ஸ்பிரஸ் பேர்ள் கப்பல் தீப்பற்றியதால் ஏற்பட்ட பாதிப்புக்கு நட்டஈட்டை பெற்றுக்கொள்வதற்கான பிரேரணை, இந்தப் பாராளுமன்ற நிலையியல் கட்டளைகளின் பிரகாரமும் ஜனநாயக பாராளுமன்ற முறைமையின் அடிப்படை சம்பிரதாயங்களுக்கு அமையவும் இந்தச் சபையில் கலந்துரையாடவோ கேள்வி எழுப்பவோ முடியாத விடயம்.

ஏனெனில், 2018இல் அமைக்கப்பட்ட பாராளுமன்ற நிலையியல் கட்டளையின் பிரகாரம் நீதிமன்ற விசாரணைக்கு உட்படுத்தப்பட்டிருக்கும் ஒரு விடயம் அல்லது நீதிமன்றம் தீர்ப்பொன்றை வழங்க இருக்கும் விடயம் தொடர்பாக, எந்த கேள்விகளையும் பாராளுமன்றத்தில் எழுப்ப முடியாது. இது உலகில் அனைத்து பாராளுமன்றங்களிலும் பின்பற்றப்பட்டு வரும் மரபு.

அதன் பிரகாரம், எக்ஸ்பிரஸ் பேர்ள் கப்பல், எமது கடல் எல்லைக்குள் தீப்பற்றி எரிந்ததால், அதனால் ஏற்பட்ட பாதிப்புக்கு நட்டஈடாக 6.4 பில்லியன் அமெரிக்க டொலரை பெற்றுக்கொள்வதற்காக இலங்கை சார்பாக சட்டமா அதிபர் திணைக்களம், சிங்கப்பூர் மேல் நீதிமன்றத்தில் ஏப்ரல் 25ஆம் திகதி வழக்கு தாக்கல் செய்திருக்கிறது. அதன் பிரகாரம் நேற்று (நேற்று முன்தினம்) வழக்கு, விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது. மீண்டும் 15ஆம் திகதி வழக்கு விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட வுள்ளது.

அதேபோன்று, குறித்த கப்பல் மாலுமி, கப்டன், கப்பலை சட்டவிரோதமான முறையில் செலுத்தியுள்ளதாக தெரிவித்து, அவருக்கு எதிராக கொழும்பு மேல் நீதிமன்றத்தில் வழக்கு தாக்கல் செய்திருக்கிறோம். அந்த வழக்கும் தற்போது விசாரிக்கப்பட்டு வருகிறது.

இவ்வாறான நிலையில், இந்தப் பாராளுமன்றத்தில் எம்.பிக்கள் நீதிமன்ற தீர்ப்புக்கு பாதிப்பு ஏற்படும் வகையில், பொறுப்பற்ற முறையில் கருத்து தெரிவித்திருந்தார்கள். அதனால் எமது நாட்டுக்கு தற்போதும் களங்கத்தை ஏற்படுத்தி இருக்கிறது. இந்த வழக்கு தொடர்பாக அழுத்தங்கள் ஏற்பட இடமிருக்கிறது.

அத்துடன், எக்ஸ்பிரஸ் பேர்ள் கப்பல் விவகாரத்தை அரசு மறைக்க முற்படுவதாக தெரிவிக்கப்படும் குற்றச்சாட்டை இல்லாமலாக்குவதற்கே அரச தரப்பு இந்த விவாதத்தை நடத்துவதற்கு சந்தர்ப்பம் வழங்கி இருந்தது. என்றாலும் நிலையியல் கட்டளையின் பிரகாரம், இந்த விவாதத்தை நடத்த முடியாது. அதனால் இந்த விவாதத்தை நடத்துவதா இல்லையா என சபாநாயகர் தீர்மானிக்க வேண்டும்.

பாராளுமன்ற விவாதம் காரணமாக வழக்கு நடவடிக்கைக்கு பாதிப்பு ஏற்பட்டால், அதற்கான பொறுப்பை சபாநாயகர் உட்பட அனைவரும் ஏற்றுக்கொள்ளவேண்டும்.

அவ்வாறு விவாதத்தை நடத்துவதாக இருந்தால், அது தேசத்துரோகம்; விவாதிப்போர் தேசத்துரோகிகள். தேசத்துரோகிகளுடன் இணைந்து இந்த விவாதத்தில் நான் கலந்துகொள்ள மாட்டேன் என்றார்.

இதையடுத்து, நீதி அமைச்சருக்கும் எதிர்கட்சியினருக்கும் இடையில் கடும் தர்க்கம் ஏற்பட்டது. விவாதம் நடத்தப்பட வேண்டும் என்பதில் எதிர்க்கட்சியினர் உறுதியாக இருந்தனர்.

இந்நிலையில், விவாதத்தை நடத்துவதா இல்லையா என தீர்மானியுங்கள் என நீதி அமைச்சர் விஜேதாஸ ராஜபக்ஷ சபாநாயகரை கேட்டுக்கொண்டார்.

அதனைத் தொடர்ந்து காலை 10.20 மணியளவில் பாராளுமன்ற நடவடிக்கையை 10 நிமிடத்துக்கு ஒத்திவைத்து, கட்சித் தலைவர்கள் கூட்டத்தை நடத்துவதாக தெரிவித்து, சபை நடவடிக்கையை சபாநாயகர் ஒத்திவைத்தார்.

எனினும் 10.20 மணிக்கு ஒத்திவைக்கப்பட்ட சபை மீண்டும் நண்பகல் 12.05 மணிக்கே கூடியது. இதன்போது, சபாநாயகர், எக்ஸ்பிரஸ் பேர்ள் கப்பல் விவகாரம் தொடர்பான வழக்கு விசாரணை இடம்பெற்றுவருவதால், அதற்கு பாதிப்பு ஏற்படும் விடயங்களை தவிர்த்து, கப்பல் தீப்பற்றி எரிந்ததால் சுற்றுச்சூழலுக்கு ஏற்பட்டிருக்கும் பாதிப்பு தொடர்பாகவும் அது தொடர்பில் நடவடிக்கை மேற்கொள்ள சட்டத்தில் இருக்கும் குறைபாடுகள் தொடர்பாகவும் மட்டும் விவாதத்தில் கருத்து தெரிவிக்கும் வகையில், கட்சித் தலைவர்கள் கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டதால் எம்.பிக்கள் அந்த விடயங்களை மட்டுமே பேச வேண்டுமெனக்கூறி விவாதம் தொடர அனுமதித்தார்.



# பற்றி எரியும் பாகிஸ்தான்

## இணைய சேவைகள் முடக்கம்

பாகிஸ்தானின் முன்னாள் பிரதமர் இம்ரான் கான் நேற்று முன்தினம் இஸ்லாமாபாத் உயர் நீதிமன்றத்திற்கு வெளியே தேசிய ஊழல் தடுப்புப் பிரிவினரால் கைது செய்யப்பட்டார்.

தெஹ்ரீன்-ஏ-இன்சாஃப் (பிடிஐ) கட்சியின் தலைவரும், முன்னாள் கிரிக்கெட் வீரருமான இம்ரான் கான், நம்பிக்கையில்லா வாக்கெடுப்பில் கடந்தாண்டு தோல்வியடைந்து ஆட்சியை இழந்தார்.

அதன்பிறகு, பயங்கரவாதம், மதநிந்தனை, கொலை, வன்முறையில் ஈடுபட்டமை, வன்முறையைத் தூண்டியமை உள்ளிட்ட குற்றச்சாட்டுகளுக்காக அவர் மீது சுமார் 140க்கு மேற்பட்ட வழக்குகள் தொடரப்பட்டன.

அந்த வழக்குகளில் அவருக்கு எதிராக பிணையில் வெளிவர முடியாத பல கைது ஆணைகள் பிறப்பிக்கப்பட்டன.

எனினும் இம்ரானின் இல்லத்தைச் சுற்றிலும் அவரது ஆதரவாளர்கள் திரண்டு கலவரத்தில் ஈடுபட்டு வந்ததால், அவரை கைது செய்ய முடியாத நிலை நீடித்து வந்தது.

இந்த நிலையில், இஸ்லாமாத் உயர்நீதிமன்றத்தில் நடைபெற்று வந்த இரண்டு ஊழல் வழக்குகளில் பிணை பெறுவதற்காக இம்ரான் கான் நீதிமன்ற வளாகத்துக்கு செவ்வாய்க்கிழமை வந்தார்.

அப்போது யாரும் எதிர்பாராத விதமாக அவரை தேசிய ஊழல் தடுப்புப் பிரிவினர் அந்த வளாகத்தில் வைத்து கைது செய்தனர்.

அவர்களுக்கு ஆதரவாக பாகிஸ்தான் துணை இராணுவப் படையான ரேஞ்சர்களும் இம்ரானை சுற்றிவளைத்து கவச வாகனத்தில் ஏற்றிச் சென்றனர்.

இம்ரானின் கைதுக்கு எதிர்ப்பு தெரிவித்து இஸ்லாமாபாத், கராச்சி, பெஷாவர், லாகூர் உள்ளிட்ட பல்வேறு மாகாணங்களில் அவரது ஆதரவாளர்கள் வன்முறையில் ஈடுபடத் தொடங்கினர்.

வீதிகளில் சென்ற பொலிஸாரின் வாகனங்களுக்கு தீ வைத்ததுடன், இராணுவத் தளபதியின் இல்லத்தை சூறையாடியதாக தகவல்கள் வெளியாகியுள்ளன. நாடு முழுவதும் அசாதாரண சூழல் நிலவி வருவதால் பல்வேறு மாகாணங்களில் 144 தடை உத்தரவு பிறப்பிக்கப்பட்டு இணைய சேவைகள் முடக்கப்பட்டுள்ளன.

மேலும், முகநூல், டுவிட்டர், வட்ஸ்அப் போன்ற சமூக ஊடகங்களைப் பயன்படுத்தாதவாறு முடக்கியுள்ளனர். மேலும், பிரித்தானியா, கனடா உள்ளிட்ட பல்வேறு நாடுகளிலும் இம்ரானின் ஆதரவாளர்கள் பாகிஸ்தான் தூதரக அலுவலகங்களுக்கு வெளியே போராட்டத்தில் ஈடுபட்டு வருகின்றனர்.

இஸ்ரேல்

# முப்பரிமாண பிரிண்டிங் முறையில் மீன் சதை



முப்பரிமாண பிரிண்டிங் முறையில் மீன் சதையை உருவாக்கி ஆராய்ச்சியாளர்கள் சாதனை படைத்துள்ளனர்.

வளர்ந்துவரும் உணவுத் தொழில்நுட்பத்துறையில் இது ஒரு மைல்கல்லாகக் கருதப்படுவதோடு, மாற்று ஊட்டச்சத்து ஆதாரங்களை நீண்ட நாள்களாக தேடிவரும் மனிதகுலத்துக்கு இது ஒரு வரப்பிரசாதமாகவும் பார்க்கப்படுகின்றது.

இஸ்ரேலின் ஸ்டேக்ஹோல்டர் ஃபூட்ஸ் மற்றும் சிங்கப்பூரைத் தலைமையகமாகக் கொண்ட உமாமி மீட்ஸ் நிறுவனங்கள் இணைந்து இந்தப் புதிய கண்டுபிடிப்பை சாத்தியப்படுத்தியுள்ளன.

மேலும் இது நோய் எதிர்ப்பு சக்தி மிக்கது என்றும் மிகவும் சுத்தமானது என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அத்துடன் குறித்த இரு நிறுவனங்களும் இணைந்து தங்களது உற்பத்திப் பொருட்களை 2024ஆம் ஆண்டு சந்தைக்கு கொண்டுவர முயற்சிகள் மேற்கொண்டு வருவதாகவும் முதலில் மலேசியாவில் இந்த இறைச்சி அறிமுகப்படுத்தப்படும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

வொஷிங்டன்

# டுவிட்டரில் அறிமுகமாகும் புதிய அம்சங்கள்





உலகின் மிகப்பெரும் செல்வந்தரும், டெஸ்லா, ஸ்பேஸ் எக்ஸ் நிறுவனங்களின் ஸ்தாபகருமான எலோன் மஸ்க் கடந்த சில மாதங்களுக்கு முன்னர் டுவிட்டரைக் கொள்வனவு செய்திருந்தார்.

இதையடுத்து டுவிட்டரில் பல்வேறு மாற்றங்களைச் செய்து வருகின்றார். அந்தவகையில் தற்போது டுவிட்டரில் தொலைபேசி இலக்கம் இல்லாமல் ஓடியோ மற்றும் வீடியோ அழைப்பினை ஏற்படுத்தும் வசதியை அந்நிறுவனம் அறிமுகப்படுத்தவுள்ளது. இதனால் பயனாளர்கள் உற்சாகம் அடைந்துள்ளனர்.

சென்னை

# ரஜினியின் வீட்டில் தொடரும் மர்மம்



சூப்பர் ஸ்டார் ரஜினிகாந்திற்கு ஐஸ்வர்யா, சௌந்தர்யா என இரண்டு மகள்கள் உள்ளனர். இதில் மூத்த மகள் ஐஸ்வர்யா, தமிழ் சினிமாவில் இயக்குனராகப் பணியாற்றி வருகிறார்.

இளைய மகள் சௌந்தர்யா, தயாரிப்பாளர், இயக்குநர் என பன்முகத் திறமை கொண்டவராக வலம் வருகிறார். இவர், அவரின் தந்தையை வைத்து 'கோச்சடையான்' என்ற அனிமேஷன் திரைப்படத்தை இயக்கி இருந்தார்.

இந்நிலையில் சௌந்தர்யா ரஜினிகாந்த், தேனாம்பேட்டை பொலிஸ் நிலையத்தில் புகார் ஒன்றை அளித்துள்ளார்.


அதில், 'கடந்த ஏப்ரல் 23ஆம் திகதி கோபாலபுரத்தில் இருந்து தேனாம்பேட்டையில் இருக்கும் கல்லூரிக்கு சென்றேன். அப்பொழுது எனது காரின் மற்றொரு சாவி பவுச்சுடன் காணாமல் போனது. அதனால் அதை தயவு செய்து கண்டுபிடித்துத் தருமாறு கேட்டுக் கொள்கிறேன்' என குறிப்பிட்டு உள்ளார்.

முன்னதாக நடிகர் ரஜினிகாந்தின் மூத்த மகள் ஐஸ்வர்யா, போயஸ்கார்டனில் வீட்டில் இருந்த லொக்கர் பெட்டியில் வைக்கப்பட்டிருந்த சுமார் 60 பவுன் தங்க, வைர, நவரத்தின கற்கள் பதித்த பாரம்பரியமான நகைகள் காணாமல் போனதாக சென்னை தேனாம்பேட்டை பொலிஸ் நிலையத்தில் புகார் அளித்திருந்தார் என்பதும் குறிப்பிடத்தக்கது.

பெங்களூர்

# மனசாட்சியுடன் வாக்களியுங்கள்

## பிரகாஷ் ராஜ்



மனசாட்சியுடன் வாக்களியுங்கள் என நடிகர் பிரகாஷ் ராஜ் மக்களிடம் கேட்டுள்ளார். கர்நாடக சட்ட பேரவை தேர்தலுக்கான வாக்குப்பதிவு நேற்று ஆரம்பமாகியது. இந்நிலையில், பிரகாஷ் ராஜ், பெங்களூரு சாந்தி நகரில் உள்ள செயின்ட் ஜோசப் பாடசாலையில் உள்ள வாக்குச்சாவடியில் வாக்களித்தார். முன்னதாக நடிகர் பிரகாஷ்ராஜ் டுவிட்டர் பதிவில், 'காலை வணக்கம் கர்நாடகா... நான் வகுப்புவாத அரசியலுக்கு எதிராக,40% ஊழல் அரசுக்கு எதிராக வாக்களித்துள்ளேன். நீங்களும் மனசாட்சியுடன் வாக்களியுங்கள்' எனப் பதிவிட்டுள்ளார்.

# பரிசுத்தொகை வழங்க விஜய் திட்டம்



தமிழகத்தில் நடந்து முடிந்த பிளஸ் 2 பரீட்சையின் பெறுபேறுகள் எட்டாம் ஆம் திகதி வெளியாகியிருந்தன.

இப் பரீட்சையில் அதிக மதிப்பெண் பெற்ற மாணவர்களை நேரில் அழைத்து பாராட்டி, கல்வி உதவித்தொகை வழங்க நடிகர் விஜய் திட்டமிட்டுள்ளதாகவும், 10ஆம் வகுப்பு தேர்வு முடிவுகள் வெளியான பின், அவர்களின் விவரங்களையும் திரட்டி, வரும் 30ஆம் திகதிக்குள் சமர்ப்பிக்க வேண்டும் என்றும் கூறப்பட்டுள்ளது.

மொத்தமுள்ள 234 சட்டசபை தொகுதிகளுக்கும், விஜய் அளிக்கும் உதவிகள் சேரும் வகையில், இந்த நிகழ்ச்சி திட்டமிடப்படுகிறது.

சம்பியன்ஸ் லீக்

# சமநிலையில் முடிவடைந்த மட்ரிட் சிற்றி போட்டி



ஐரோப்பிய கால்பந்தாட்டச் சங்கங்களின் ஒன்றியத்தின் சம்பியன்ஸ் லீக் தொடரில், நடப்புச் சம்பியன்களான றியல் மட்ரிட்டின் மைதானத்தில் நேற்று அதிகாலை நடைபெற்ற அவ்வணிக்கும், இங்கிலாந்து பிறீமியர் லீக் கழகமான மன்செஸ்டர் சிற்றிக்கும் இடையிலான முதலாவது சுற்று அரையிறுதிப் போட்டியானது 1-1 என்ற கோல் கணக்கில் சமநிலையில் முடிவடைந்தது.

மட்ரிட் சார்பாகப் பெறப்பட்ட கோலை வினிஷியஸ் ஜூனியர் பெற்றதோடு, சிற்றி சார்பாகப் பெறப்பட்ட கோலை கெவின் டி ப்ரூனே பெற்றிருந்தார்.



# ஸ்னூக்கர், பிலியட்ஸில் வென்ற சமிந்த கொடிகார

■ எஸ்.கே. குமார்

நுவரெலியா விளையாட்டுக் கழகத்தின் ஏற்பாட்டில் ஏப்ரல் வசந்த காலத்தை முன்னிட்டு நடத்தப்பட்ட ஸ்னூக்கர், பிலியட்ஸில் முதலாமிடத்தை சமிந்த கொடிகார பெற்றுக் கொண்டார்.

ஸ்னூக்கரில் இரண்டாமிடத்தை அனுர டி சில்வாவும், பிலியட்ஸில் இரண்டாமிடத்தை அனுர சேனரட்னவும் பெற்றுக் கொண்டனர்.

பிலியட் இரட்டையர் போட்டியில் முதலாமிடத்தை எம்.டி. பூசோவும், யசித்த பிடிகலவும் இரண்டாமிடத்தை அருணசாந்தவும், சுகததாஸ ரவீந்தரவும் பெற்றுக்கொண்டனர்.

சிக்ஸ் றெட் ஸ்னூக்கரில் நிமால் ஜயந்த முதலாமிடத்தையும், நமிந்து பெரேரா இரண்டாமிடத்தையும் பெற்றனர்.

புத்தளம் லெஜன்ட்ஸ் கழகத் தொடர்

# முடிசூடிய வி.ஐ.பி



■ எம்.யூ.எம். சனூன்

புத்தளம் லெஜன்ட்ஸ் கழக திறந்த அணிகளுக்கிடையிலான தொடரில் வி.ஐ.பி சம்பியனானது.

அணிக்கு ஏழு பேர் கொண்ட இத்தொடரின் இறுதிப் போட்டியானது அண்மையில் புத்தளம் மாவட்ட விளையாட்டு அரங்கில் நடைபெற்றபோது நியூ ஸ்டார்ஸ் லெஜன்ட்ஸை 1-0 என்ற கோல் கணக்கில் வென்றே வி.ஐ.பி சம்பியனானது.

இறுதிப் போட்டியின் சிறந்த கோல் காப்பாளராக வி.ஐ.பியின் முராத் தெரிவாகியதோடு, சிறந்த வீரராக அதேயணியின் சமீர தெரிவானார்.

# ஐ.பி.எல்: பெங்களூரை வீழ்த்திய மும்பை



இந்தியாவின் உள்ளூர் இருபதுக்கு 20 தொடரான இந்தியன் பிறீமியர் லீக்கில், மும்பையில் நேற்று முன்தினமிரவு நடைபெற்ற றோயல் சலஞ்சர்ஸ் பெங்களூருடனான போட்டியில் மும்பை இந்தியன்ஸ் வென்றது.

ஸ்கோர் விவரம்:

நாணயச் சுழற்சி: மும்பை

பெங்களூர்: 199/6 (20 ஓவ.) (துடுப்பாட்டம்: கிளென் மக்ஸ்வெல் 68 (33), பப் டு பிளெஸி 65 (41), தினேஷ் கார்த்திக் 30 (18) ஓட்டங்கள். கமரொன் கிறீன் 1/15 [2], குமார் கார்த்திகேயா 1/35 [4], ஜேஸன் பெஹ்ரென்டோர்ஃப் 3/36 [4])

மும்பை: 200/4 (16.3 ஓவ. ) (துடுப்பாட்டம்: சூரியகுமார் யாதவ் 83 (35), நெஹால் வதேரா ஆ.இ 52 (34), இஷன் கிஷன் 42 (21) ஓட்டங்கள்)

போட்டியின் நாயகன்: சூரியகுமார் யாதவ்.

இந்நிலையில், கொல்கத்தாவில் இன்றிரவு 7.30 மணிக்கு நடைபெறவுள்ள போட்டியில் ராஜஸ்தான் றோயல்ஸை கொல்கத்தா நைட் றைடர்ஸ் எதிர்கொள்ளவுள்ளது.

# சம்பியனான துறைநீலாவணை மத்திய விளையாட்டுக் கழகம்

■ எம்.எஸ்.எம். ஸாகிர்





நாவிதன்வெளி 15ஆம் கிராம பாமடி விளையாட்டு மைதானத்தில் அண்மையில் நடைபெற்ற மென்பந்தாட்ட கிரிக்கெட் தொடரில் துறைநீலாவணை மத்திய விளையாட்டுக் கழகம் சம்பியனானது.

32 அணிகள் அணிகள் பங்கேற்ற இத்தொடரின் இறுதிப் போட்டியில் புளூ டயமண்ட் விளையாட்டுக் கழகத்தை வென்றே மத்திய விளையாட்டுக் கழகம் சம்பியனாகியிருந்தது.

இத்தொடரின் மூன்றாமிடத்தை நற்பிட்டிமுனை வாரணம் விளையாட்டுக் கழகம் பெற்றது.

விஜய நியூஸ்பேப்பர்ஸ் லிமிட்டெட்டினால் வியாழக்கிழமை, 11 மே 2023, இல. 08, ஹுணுபிட்டிய குறுக்கு வீதி, கொழும்பு - 02 இல் வடிவமைக்கப்பட்டு இந்த மின்னிதழ் வெளியிடப்பட்டது.